உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 10 வியாழக்கிழமை (23-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:101



யாழ்ப்பாணத்தின் நிலைமையை நேரில் அறிந்து கொள்ளும் பொருட்டு நேற்று முன்தினம் இங்கு வந்து சேர்ந்த இலங்கைக்கான ஆஸ்திரேலிய பிரதித் தூதுவர் செல்வி காதி குலுக்மன் நேற்றுக் காலை யாழ். அரச செயலகத்துக்கு விஜயம் செய்தார். அங்கு யாழ். அரச அதிபர் தலைமையில் இடம் பெற்ற - அரச திணைக்கள உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலில் அவர் பங்குபற்றியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

படங்கள் பொ. இராஜேஸ்வரன்.

# அரசாங்கமும் புலிகளும் கேட்டால்

# பிரிட்டனும் மத்தியஸ்தம் வகிக்கும்

## தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளை சந்தித்தபோது தூதர் விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்23

**"அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கோரிக்கை விடுத்தால் இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராகச் செயற்பட பிரிட்டன் கூடத் தயாராக இருக்கின்றது".**

**நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருக்கும் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் லிண்டா ஜோய் டபீல்ட் அம்மையார் தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளை நேற்று இங்கு சந்தித்தபோது இவ்வாறு கூறினார்.**

யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, எஸ். அரவிந்தன், எஸ்.குலநாயகம், புளொட் சார்பில் எம்.கண்ணன், பெனடிக்ற் தனபாலசிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ் (சுரேஷ் அணி) சார்பில் ஏ.ஜீ.லிங்கேஸ்வரன், ஏ.யு.உதயகுமார் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் இருபது வருடங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர பிரிட்டன் உதவ வேண்டும் என்று இந்தச் சந்திப்பில் பங்குபற்றிய தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் தூதரிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதற்கு பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் பதிலளித்தார்.

"இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக நோர்வே அரசு தற்போது எடுத்திருக்கும் முன்முயற்சிகள் தொடர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## 2 தபால் அதிபர்கள் உட்பட வவுனியாவில் ஐவர் கைது

வவுனியா,மார்ச்23

வவுனியா தபால்நிலைய அதிபர்கள் இருவர் உட்பட 5 பேர் கொழும்பில் இருந்து வந்த விசேட புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டு கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

தபால் நிலைய அதிபர்களான எஸ்.குகதாசன், கே.சுப்பிரமணியம் பிள்ளை மற்றும் தபால்நிலைய சிற்றூழியர்களான ரவீந்திரன், திருநாவுக்கரசு வவுனியா நகரப்பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றின்

(12ஆம் பக்கம் பார்க்க)

### விமான நிலையத்துக்கு அருகில் உள்ள

## ஆலயம், பாடசாலை, மயானம் மூன்றுக்கும் செல்லத் தடை!

### மட்டக்களப்பில் திடீர் உத்தரவு

மட்டக்களப்பு, மார்ச்23

மட்டக்களப்பு விமான நிலையச் சுற்றாடலில் அமைந்துள்ள புதுநகர் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம், ஆலையடிச்சோலை மயானம் ஆகியவற்றுள் பொது மக்கள் பிரவேசிப்பதற்கு நேற்று முதல் விமானப்படையினர் தடைவிதித்துள்ளனர் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

விமான நிலையத்தின் முன்னரங்க காவல் நிலையப் பகுதியில் கடந்த திங்களன்று விடுதலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்க் கட்சிகள் நேற்று

## பிரி. தூதுவருடன் சந்திப்பு ஆனால் ஜெகன் வரவில்லை

### அவருக்கு அழைப்புத் தாமதமாம்

யாழ்ப்பாணம்,மார்ச்23

யாழ்ப்பாணம் வந்துள்ள பிரிட்டிஷ் தூதுவரை நேற்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் சந்திப்பதற்கு ஒழுங்கு செய்தவர்கள், திட்டமிட்டுத் தம்மைப் புறக்கணித்துவிட்டதாக யாழ். நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி யாழ். அமைப்பாளருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்) விசனம் தெரிவித்துள்ளார்.

"காலை 9.00 மணிக்கு நடைபெறும் இச்சந்திப்புக் குறித்து நேரகாலத்துடனேயே திட்டமிடப்பட்டுவிட்டது. ஆனால் முற்பகல் 11.00 மணிக்கே இச்சந்திப்புக் குறித்து-

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனியன்று நடைபெறும் பேரணிக்கு பல தரப்பிலும் ஆதரவு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்23

யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்களுக்கு நீதியான நியாயமானதீர்வை வழங்க வேண்டும் என்று கோரி நாளை மறுதினம் யாழ்நகரில் நடத்தப்பட உள்ள சமாதானப் பேரணிக்கு கொழும்பில் உள்ள ஐக்கிய மத நிலையம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

பேரணிக்கு ஆதரவு தெரிவித்து அந்த நிலையம் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவுக்கு செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

"நாடு இன்று முகம் கொடுத்து வரும் கொடிய யுத்தம் ஓய்ந்து இந்த நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் எனக் கோரி யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ள சமாதானப் பேரணிக்கு நாம் பூரண ஆதரவை வழங்குகின்றோம்.

"நாம் ஓர் சர்வமத அமைப்பு எமது நோக்கம் சமூகத்தில் சமாதானத்தை ஏற்படுத்துவதும் ஒழுங்கு, சமய மரபுகளைப் பேணிக்காப்பதுமாகும் - என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அமைப்பில் ஆயர் கெனத் பெர்ணான்டோ, அதிமேற்றிராணியார் நிக்கிலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ அகில இலங்கை இந்துப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு விரைவில் உரிய மணிக்கூடுகள்

### பிரிட்டிஷ் தூதர் உறுதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்23

"பிரிட்டிஷ் இளவரசர் கடந்த வருடம் இலங்கைக்கு விஜயம் செய்த சமயம் உறுதி அளித்தபடி யாழ். நகர மணிக்கூண்டுக் கோபுரத்தில் பொருத்துவதற்குரிய மணிக்கூடுகளை இன்னும் நான்கு மாதத்தில் அனுப்பிவைப்போம்"

யாழ். மாநகர சபைக்கு நேற்று நண்பகல் விஜயம் செய்த பிரிட்டிஷ் தூதர் செல்வி லிண்டா ஜோய் டபீல்ட் இவ்வாறு தெரிவித்தார்.

மாநகர சபை ஆணையாளர் பொ.பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு பேசும்போது அவர் இதனைக் கூறினார்.

மணிக்கூடுகளை அனுப்பிவைப்பதற்கு முன்னர் மணிக்கூண்டுக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைபறிச்சான் முகாம் மீது புலிகள் கடும் ஷெல் தாக்குதல்

### சிப்பாய் பலி; கட்டடங்கள் சேதம்

தம்பலகாமம், மார்ச்23

கட்டைபறிச்சான் இராணுவமுகாம் மீது நேற்றுக்காலை 8.30 மணியளவில் விடுதலைப்புலிகள் ஷெல்தாக்குதல் நடத்தியதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் எனவும்-முகாமின் சில கட்டடங்களுக்கு சிறிது சேதம் ஏற்பட்டதாகவும் - பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

அளவெட்டி வடக்கு
## தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய
### பங்குனி குளிர்த்தி விழா
**27-03-2000**

மேற்படி ஆலய குளிர்த்தி விழா வழமைபோல் பங்குனி இரண்டாம் திங்கட்கிழமை 27.03.2000 அன்று சிறப்பாக நடைபெற இருப்பதால் அம்பாள் அடியார்கள் விழாவிற்கு தேவையான பொருள்கள், பணம் முதலியவற்றைக் கொடுத்து விழாவில் பங்குபற்றி தேவியின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

(74737) *ஆலய பரிபாலன சபை*

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### நீங்காத நினைவில்
**மார்ச் 23**

தோற்றம் 15 - 04 - 1927



மறைவு 23 - 03 - 1986

மக்கள் எழுத்தாளர்
### கே. டானியல்

**சமூகத்தின் மாகொடிய நோயான தீண்டாமைக்கெதிராக தன் இலக்கியப் படைப்புக்களையும், வாழ்வையும் அர்ப்பணித்தவர்.**

என்றும் நீங்காத நினைவுகளில்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*76/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.*
(C/11492)

## 90 ஆம் நாள் நினைவு



அமரர்
### செல்வி சுதாஜினி சண்முகசுந்தரம்

அன்னையின் மடியில் **15-01-1977**
ஆண்டவன் அடியில் **25-12-1999**

மலராய் நீ மணம் பரப்பும் வேளையிலே
மண்ணிலே விழுந்துவிட்ட கொடுமைகண்டு
அனலாய் எம் இதயங்கள் உருகுதம்மா
ஆறாகக் கண்ணீர் பெருகுதம்மா.

உன் பிரிவால் துயருறும்
**பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள்.**

*பூதவராயர் லேன், திருநெல்வேலி கிழக்கு.*
(74725)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
சச்சிதானந்தம சஞ்ஜீவன் அவர்களின்
அன்புத் தாயாரான
**திருமதி சிவலோகநாயகி சச்சிதானந்தம்**
அவர்கள் 22-03-2000 அன்று சிவபதம் அடைந்தமை இட்டுத் துயருறும் குடும்பத்தினரின் சோகத்தில் பங்கெடுத்துக் கொள்கின்றோம்.

நண்பர்கள்,
1999 வர்த்தகப்பிரிவு,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.
(74736)

## கல்வி டிப்ளோமா கற்கைநெறி

யாழ்ப்பாணம்,மார்ச்23

பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பும் பட்டதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை யாழ். திறந்த பல்கலைக்கழகத்தில் பெற்று 25 ஆம் திகதி சனிக்கிழமை 12 மணிக்கு முன்பு ஒப்படைக்குமாறு பிராந்திய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரன் கேட்டுள்ளார். (உ-10)

## கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 23

உரும்பிராய் வடக்கு நவசக்தி முன்பள்ளி கட்டடத் திறப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறும்.

நவசக்தி சனசமூக நிலையத் திறந்த வெளியரங்கில் மட்டுவில் கிராம உத்தியோகத்தர் வே.துரைசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவின் பிரதம விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன் சர்வோதய செயற்றிட்ட இயக்குநர் எஸ்.வி. சங்கரப்பிள்ளை, அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் அ. நல்லதம்பி ஆகியோர் பங்குபற்றுவர். (உ-3-15)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்23

கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்படும் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் இன்று துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் உதைபந்தாட்டப் போட்டிகளில் பிற்பகல் 3 மணிக்கு பளை பிரதேச செயலர் பிரிவு அணியுடன் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு அணியும், மாலை 4 மணிக்கு நல்லூர் பிரதேச செயலர் பிரிவு அணியுடன் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு அணியும் மோதும். (8)

**G.A.Q - 2000**
PAPER CLASSES
ஆரம்பமாகியுள்ளது
* Gr. 5 முதல் O/L வரை
சிறந்த பெறுபேறுகளுக்கு
**SHAMROCK**
(C/11501)

**ராஜா**
யாழ்ப்பாணம்
ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்யாகிருஷ்ணன், சிவாஜி மற்றும் பலர் நடித்த
**படையப்பா**
காட்சிகள்
10.30, 2.30
(C/11349)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
ரசிகர்களே
ரம்யாகிருஷ்ணன்,சௌந்தர்யா
நடித்த
**அம்மன்**
(ரீலீஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
மனிதர்களை பேய்களுக்காக கொலை செய்யும் சம்பவங்கள் நிறைந்த காட்சி
(74710)

**லிபேட்டி**
அச்சுவேலி
பார்த்தீபன், ப்ரீதா, வடிவேல்
நடிப்பில்
*காக்கைச் சிறகினிலே*
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P : 070-212223
070-212678
*Fax No:- 0094 - 70212223*
(C/11493)

# அனுமதி அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம்,மார்ச்23

நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெற உள்ள தட்டெழுத்தாளர் பதவிக்கு ஆள்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்ற உள்ள சிலரின் அனுமதி அட்டைகளை யாழ். செயலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார்.

ஈ.சஜிதா, யு.கதிரவேலு, ஏ. தயாபரன், ஏ.சிறோமி பேட்டில் ஆகியோர் தகுந்த ஆதாரங்களைக் காட்டி செயலகத் தாபனக் கிளையில் தமது அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-5)

**T.R.R.O. COMPUTER TRAINING CENTRE**
106, 4th Cross Street,
Jaffna.
Tel. No.:- 2416

**புதிய பயிற்சிநெறிகள் ஆரம்பம்**

சான்றிதழ் பயிற்சி நெறிகள்:-

| | கட்டணம் |
|---|---|
| * Pascal | Rs.3000.00 |
| * d Base+++ | Rs.3000.00 |
| * Visual Basic | Rs.3000.00 |
| * Visual FoxPro | Rs.3000.00 |

காலம் - 4 மாதம்

Special Course for Computer Printers:
(கணனி சார் தட்டச்சு வேலைகள்)

| | |
|---|---|
| * Page Maker | Rs.1750.00 |
| * Coral Draw (9.0) | Rs.1750.00 |

**Internet & e mail** அறிமுகப் பயிற்சி நெறி:-
காலம் - 10 மணித்தியாலங்கள்.
கட்டணம் - ரூ.1200
குறிப்பு - சிறு சிறு குழுக்களாக பிரிக்கப்பட்டு (ஒவ்வொரு குழுவும் 6 பேரை உள்ளடக்கியிருக்கும்) மாணவர்களின் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்.

**Diploma in Computer Hardware:-**
காலம் - 6 மாதங்கள்
கட்டணம் - ரூ7000

கட்டணம் பகுதியாக செலுத்தப்படலாம்

ஆரம்பம் :- 01-04-2000
விண்ணப்ப முடிவு திகதி :- 25-03-2000

*பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தவர்களும், தொழில் புரிவோரும், உயர் கல்வி கற்போரும் விண்ணப்பிக்கலாம்.*

(C/11503) - இயக்குநர் -

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## அறிவித்தல்

### சிறுவர் பூங்காவை பாரமெடுத்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராம உப அலுவலக எல்லைக்குள் யாழ்ப்பாணம் மானிப்பாய் என்னும் பிரதான வீதி கூழாவடியில் அமைந்திருக்கும் சிறுவர் பூங்காவை இச்சபை பொறுப்பேற்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பான ஆட்சேபனை தெரிவிக்க விரும்புபவர்கள் எழுத்து மூலம் 03.04.2000ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் எம்முடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*வெ. அன்ரன் ஜோன்சன் ஜே.பி.யூ.எம்.*
*தலைவர்,*
*வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,*
*மானிப்பாய்.*
(C/11506)

## கலந்துரையாடல்

வட்டுக்கோட்டைத்தொகுதியில் உள்ள மீனவசங்க தலைவர். செயலாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை (2000-03-24) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வலிகாமமமேற்கு பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் இப்பிரதேச சபைத் தலைவரும், வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான திரு. ந.திரிலோகநாதன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் திரு. சோ.விக்கினேஸ்வரன் கலந்து கொள்வார். எனவே மீனவ சங்க தலைவர், செயலாளர் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன.

**ந. திரிலோகநாதன்**
தலைவர்,
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**
**சுழிபுரம்.**
(C/11502)

# யுத்தத்தை நிறுத்தி நாட்டில் அமைதியை ஏற்படுத்த

# அரசுக்கு, எதிர்க்கட்சிக்கு அழுத்தம் கொடுங்கள்!

## மகாநாயக்கர்களிடம் இந்துசமய பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 23

'யுத்தத்தை உடன் நிறுத்திட நியாயமான தீர்வை வழங்கி இந்த நாட்டில் அமைதியை நிலவச் செய்யுமாறு அரசாங்கத்துக்கும் — எதிர்க்கட்சிக்கும் பாரிய அழுத்தம் கொடுக்குமாறு அஸ்கிரிய, மல்வத்த மகாநாயக்க தேரர்களை மிகுந்தஆராமையோடு கேட்டுக் கொள்கின்றோம்.'

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவை மகாநாயக்க தேரர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த நாட்டின் வரலாற்றுக் காலம் தொட்டு இந்துக்களும் பௌத்தர்களும் சகோதரத்துவத்துடன் வாழ்ந்துவந்தனர். இந்துக்களின் வீடுகளில் புத்தபிரானின் சிலையும் பௌத்தர்களின் வீடுகளில் இந்துத் தெய்வங்களின் சிலையும் வைத்துப் பூசிக்கப்பட்டு வருவது இந்த இரு மதங்களுக்குமிடையேயுள்ள அந்தரங்கத் தொடர்பை எடுத்துக் காட்டுகிறது. கலாசார ரீதியில் இவ்விரு மதத்தினரும் கொண்டுள்ள அன்னியோன்னியமான தொடர்பை ஞாபகமூட்டுவதில் நாம் பெருமை அடைகின்றோம்.

துரதிர்ஷ்டவசமாக தமிழ், சிங்கள அரசியல்வாதிகள் இந்த இரு பிரிவினருக்கு மிடையே ஏற்பட்ட பிரச்சினையைப் பேசித் தீர்க்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் ஆயுதப் போராட்டம் நடைபெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இப்போராட்டத்தால் இந்துக்களும் - பௌத்தர்களும் மாபெரும் சோதனைகளைச் சந்திக்கவேண்டியுள்ளது, வாழவேண்டிய எமது இந்து இளைஞர்களும் பௌத்த இளைஞர்களும் அநியாயமாகப் போரில் மடியும் கொடுமையை எமது கண்ணால் பார்க்க வேண்டியுள்ளது. எத்தனையோ ஆயிரம் பிள்ளைகள் அநாதைகள் ஆக்கப்பட்டுவிட்டார்கள். மேலும் பல பெண்கள் விதவைகள் ஆக்கப்பட்டு விட்டார்கள். எத்தனையோ பேர் அங்கவீனர்களாக்கப் பட்டுவிட்டார்கள். ஆயிரக் கணக்கானோர் வீடுகளை இழந்து அகதிகளாக வாழ்கின்றனர்.

எமது வருங்காலக்குழந்தைகள் வாழ்வதற்க க ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

எத்தனையோ வரலாற்றுப் புகழ்மிக்க வழிபாட்டு நிலையங்கள் அழிக்கப்பட்டு பூசை இன்றிப் பூட்டிக் கிடக்கின்றன.

இந்தப் போரால் தமிழ், சிங்கள இளைஞர்கள் இறக்கின்றார்கள்.

எமது பாரம்பரிய கலாசார விழாக்களை நாம் மகிழ்ச்சியோடு நடத்த முடியாதுள்ளது. எங்கும் பயப்பீதியையே நாம் காணவேண்டியிருக்கின்றது.

இத்தகைய சூழ்நிலை இந்நாட்டில் தொடருமானால் இந்துக்களும் பௌத்தர்களும் இந்த நாட்டில் முழுமையாக அழியும் நிலை உருவாகுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

ஆகையால் அன்பு நிறைந்த அஸ்கிரிய மல்வத்தை மகாநாயக்கதேரர்களே! நீவிர் இந்த நாட்டின் மிக உயரிய பௌத்தமதத்தின் கண்ணியம்மிக்க தலைவர்கள் என்பதை நாமறிவோம்.

இந்தச் சோதனை மிகுந்த நேரத்தில் இந்து மதத்தைச் சேர்ந்த நாமும் நீவிரும் மிகுந்த நிதானமாகவும் கண்ணியத்தோடும் தெய்வீக சிந்தனையோடும் செயற்பட வேண்டிய மிகப்பெரும் பொறுப்புள்ளவர்கள் என்பதை உளமார நம்புவோமாக.

நாம் இலங்கை அரசையும் எதிர்க்கட்சிகளையும் சமாதானத்தை ஏற்படுத்துமாறு ஒன்றுபட்டு மாபெரும் அழுத்தம் ஒன்றைக் கொடுப்போமாக.

நாம் இதனைத் துணிந்தாற்றாது போனால் எமது எதிர்காலச் சந்ததியை அழிப்பதற்குத் துணைபோனவர்கள் என்ற அவச்சொல்லைக் கேட்க நேரிடும். ஆகையால் எமது அன்பு நிறைந்த மகாநாயக்க தேரர்களே! உங்களை மீண்டும் மீண்டும் ஆராமையோடு கேட்டுக் கொள்வது யாதெனில் எமது பௌத்த இளைஞர்களையும் இந்து இளைஞர்களையும் சாவின் விளிம்பில் இருந்து காப்பாற்ற இன்று கிடைத்துள்ள அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துங்கள்.

சமாதான முயற்சிக்குத் தங்களின் பேராதரவு இன்று மிக அவசியம்தேவைப்படுகின்றது. இந்த உரிய பாரிய பொறுப்பில் தாங்கள் மிகுந்த கண்ணியத்தோடு செயற்படுவீர்கள் என்று மனதார நம்புகின்றோம். தங்களுக்கு ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரருடைய திருவருள் அபரிமிதமாகக் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8)

## வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படவில்லை

சண்டிலிப்பாய், மார்ச் 23

சில்லாலை உந்துவத்தை சுற்று வீதி நீண்ட காலமாகத் திருத்தப்படாது சேதமடைந்த நிலையில் உள்ளது. இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கம் கடித மூலம் விடுத்த கோரிக்கையை அடுத்து யாழ். வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் அதிகாரிகள் அண்மையில் இவ்வீதியை நேரில்வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர். இவ்வருடத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இவ்வீதியைப் புனரமைத்துத் தருவதாக உறுதியளிக்கப்பட்டிருப்பதாக சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

(ஐ-135)

## தென்மராட்சியில் தமிழ்மொழிப் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 23

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தமிழ் மொழிப் பயிற்சிகள் ஆரியபாஷா திராவிட அபிவிருத்திச் சங்கத்தினால் வழங்கப்படவுள்ளன.

ஜி.சீ.ஈ. உயர்தர, சாதாரணதரவகுப்புகளைச்சேர்ந்த மாணவர்கள் இந்தப் பயிற்சியில்சேர்ந்து கொள்ள முடியும்.

இதில் ஆர்வமுள்ள ஆசிரியர், மாணவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் உள்ள கல்வி அபிவிருத்திப் பிரிவில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் இலங்கையர் கணேசன் கேட்டுள்ளார்.

(ஐ-9)

## தாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச் 23

படையினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுழிபுரம் மத்தியைச்சேர்ந்த செல்வன் இராசேந்திரம் (வயது 24) என்ற இளைஞரே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த 19 ஆம் திகதி இவர் மூளாய் கடற்படையினரால் தாக்கப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திலும், சுன்னாகம் பொலீஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மூளாய் கடற்படை முகாமுக்கு வருமாறு தன்னை அழைத்த கடற்படையினர் தன்னைத் தனியாக உள்ளே அழைத்துச்சென்று ஆடைகளைக் களைந்துவிட்டு பொல்லுகளால் கண்மூடித்தனமாகத் தாக்கியதாகவும் விடுதலைப்புலிகளுடன் தொடர்பு உள்ளதா? எனக் கேட்டு தாக்கியதாகவும் பிரஸ்தாப இளைஞர் தெரிவித்துள்ளார்.

இந்த இளைஞர் ஒரு கடற்றொழிலாளி ஆவார்.

(ஐ-9)

### ஜேர்மனி நாடு கடத்தியோரில்

## கைதான யாழ். இளைஞர்கள் இருவரும் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, மார்ச் 23

ஜேர்மனியில் இருந்து நாடு கடத்தப்பட்டு கடந்த வியாழனன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவினால் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களும் 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டனர்.

நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வைத்தியலிங்கம் சுதாகரன், சோமசுந்தரம் தெய்வேந்திரம் ஆகிய இருவரும் நேற்று முன்தினம் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

'இந்த இரு இளைஞர்களும் விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவித்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவர்களைப் பிணையில் விடுதலை செய்யவேண்டாம் என நீதிவானிடம் கோரினர்.

ஆனால் இலங்கையில் உள்ள ஜேர்மன் தூதரகத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். ரவிராஜ் இந்த இளைஞர்கள் இருவரும் சாதாரண சட்டத்தின் கீழேயே ஆஜர் செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளும் சாதாரண சட்டத்தின் கீழேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்து சம்பந்தப்பட்ட இருவரையும் விடுதலை செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இதனை அடுத்து அவர்கள் இருவரும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

(ஐ-7)

## 'நீ புலிதானா?' எனக்கேட்டு மூர்க்கத்தனமாகத் தாக்கினர்

### பிணையில் வந்த இளைஞர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

"நீபுலிதானா? புலிதானா? எனத் திரும்பத் திரும்பக் கேட்டு சிறைக் காவலர்கள் எங்கள் மீது மூர்க்கத்தனமாகத் தாக்குதல் நடத்தினர்"

ஜேர்மனியில் இருந்து நாடு கடத்தப்பட்டு கொழும்பில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டபின் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்ட சோமசுந்தரம் தெய்வேந்திரம் என்ற இளைஞர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜேர்மன் அரசினால் வழங்கப்படும் அகதிப் பணத்தைப் பெறுவதற்காகச் சென்ற சமயம் என்னை வழிமறித்துக் கைது செய்தஜேர்மன் பொலிஸார் கடந்த 17 ஆம் திகதி கொழும்புக்கு எம்மை நாடு கடத்தினர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நாம் வந்து இறங்கியதும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் எம்மைக் கைது செய்து விசாரணை செய்துவிட்டு நீர்கொழும்பு சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்தனர்.

சிறைச்சாலைக் காவலர்கள் எம்மீது பல்வேறு வகையான கொடூர சித்திரவதைகளை மேற்கொண்டனர் என்று அந்த இளைஞர் மேலும் தெரிவித்தார். (ஐ-7)

## நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம்

வளலாய், மார்ச் 23

கோப்பாய் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களாகக் கடமையாற்றிய 12 பேருக்கும் சமுர்த்தி அதிகார சபையால் இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் வைபவம் இன்று வியாழக்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு பிரதேச செயலர் திரு. க. கேதீஸ்வரன் தலைமையில் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

(க-178)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை பழைய மாணவர் சங்கத்தினால் நேற்று நடத்தப்படவிருந்த கலைவிழாவும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளன என்று பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

(க-10)


## நன்றி நவில்கின்றோம்

யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் 1999 ஆம் 2000 ஆம் வருடங்களில் இல்ல மெய்வன்மைப் போட்டியின்போதும் உடற்பயிற்சிப் போட்டியின் போதும் எமது மாணவர்களுக்கு 'ஜிம்னாஸ்ரிக்' பயிற்சி அளித்து சிறந்த முறையில் 'ஜிம்னாஸ்ரிக்' கண்காட்சியை நடத்த முன்னின்று உழைத்த எங்கள் 'ஜிம்னாஸ்ரிக்' பயிற்றுவிப்பாளரும் எமது பாடசாலை உடற்பயிற்சித் தொண்டர் ஆசிரியருமான

### திரு. நவராசா ஜெகதீஸ்வரன்

(சசி) அவர்கள்

இத்துறையில் மென்மேலும் வளர்ச்சியடைந்து சகல நலனும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதோடு எங்கள் மனமார்ந்த நன்றியையும் தெரிவிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர்கள்,
பா. அ. சங்கம்.
யா/கொட்டடி
(74717) நமசிவாய வித்தியாலயம்.



வட்டுக்கோட்டை

## இந்து வாலிபர் சங்கம் 21-03-2000 இல் நடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

முதலாம் பரிசு இல. 1182
இரண்டாம் பரிசு இல. 1024
மூன்றாம் பரிசு இல. 340

ஆறுதல் பரிசு இலக்கங்கள்
★ 62 ★ 550 ★ 2171 ★ 1754
★ 2345 ★ 1623 ★ 2568

செயலாளர்.

[74718]

# கண்ணீர் அஞ்சலி

இ. செ. சங். வலி. வடக்குப் பிரிவுத் தலைவர்
திரு. சி. சிவமகாராசா அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி சுந்தரம் சின்னத்தம்பி

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகம், அங்கத்தவர்கள், தொண்டர்கள்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
வலி. வடக்குப் பிரிவு (74708)

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 — 12 — 1926

மறைவு 03 — 04 — 1999

## திருமதி குமாரசாமி பாறுவதிப்பிள்ளை

ஆண்டொன்று மறைந்ததம்மா
ஆறவில்லை நம் துயரம்
மீண்டுமொரு பிறப்புண்டேல்
மேதினியில் இணைந்திடுவோம்
ஆண்டவனின் தாள் நிழலில்
அடைந்திடுக சாந்தி என
வேண்டி நிதம் துதிக்கின்றோம்
மேலோய் எம் அஞ்சலிகள்

சகோதரர்கள்
க. சண்முகநாதன் (நியூசிலாந்து),
அமரர் க. தம்பிராசா, க. துரைசிங்கம்,
திருமதி ந. இராசலிங்கம், க. சிரோன்மணி.

மருமக்கள்
ரி. சூரியஜெயந்தினி (நியூசிலாந்து),
ச. ஜெயானந்தன் (நியூசிலாந்து),
சி. யசோதரா (யூ. கே.),
த. விஜிதா, து. சசிரேகா.

சங்குவேலி தெற்கு, (சி/11478)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வீரவாகு கனகசபாபதி

(இளைப்பாறிய அதிபர்)

தோற்றம்: 19-04-1930 மறைவு: 06-03-1999

திதி 23-03-2000 (அபரபட்ச சதுர்த்தி)

ஓராண்டு காலம் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவலைகள் எம்மைவிட்டு நீங்காது
உங்கள் ஆத்மாசாந்தியடைய மூளாய் சித்தி
விநாயகப்பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேர்த்தி

''அம்பிகா பதி''
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம். (74700)

# 3 ஆயிரம் தேசிய அ.அட்டைகள் கொழும்பில் இருந்து வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 23

தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக குடாநாட்டில் இருந்து விண்ணப்பித்தவர்களில் 3 ஆயிரம் பேரினது அடையாள அட்டைகள் நேற்று முன்தினம் கொழும்பிலிருந்து யாழ். செயலக ஆள் பதிவுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அவற்றைத் தரம் பிரித்துப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் யாழ். செயலக தேசிய அடையாள அட்டைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் தமது பகுதி கிராம அலுவலரிடம் சென்று தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

## வேலணைக்கு இவ்வாரம் மின் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

வேலணைப் பகுதிக்கு இவ்வாரம் மின்சாரம் விநியோகிக்கப்படும் என்று இலங்கை மின்சார சபையின் வட பிராந்தியப் பிரதிப் பொது முகாமையாளர் ஆர். முத்துரட்னானந்தம் தெரிவித்தார்.

இந்தப் பகுதிக்கு மின்னிணைப்பு வழங்குவதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் பிரிட்டிஷ் அரசு வழங்கிய ஜெனரேட்டர் மூலம் இந்த மின்விநியோகம் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

இந்த மின்விநியோகத்தினால் நாரந்தனை, மண்கும்பான், வேலணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 160 குடும்பங்கள் பயனடையவுள்ளன. (ஐ-5)

## ஆசிரியருக்குப் பண்டிதர் வகுப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

ஆரிய பாஷா திராவிட அபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்பட்டுவரும் பாலபண்டிதர் மற்றும் பண்டிதர் வகுப்புகளில் பயில விரும்பும் தமிழ்மொழியில் வாண்மையுள்ள ஆசிரியர்கள் தமது விவரங்களை எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னதாக வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்குமாறு கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா கேட்டுள்ளார். (ஐ-9-180)

## தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 23

நேற்று முன்தினம் காங்கேசன்துறைக்கு வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 53 தபாற்பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 64 தபாற்பொதிகள் இங்கிருந்து அனுப்பி வைக்கப்பட்டதாகத் தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

## விண்ணப்பப்படிவம் விநியோகம்

வலி. கிழக்கு, மார்ச் 23

வலி. கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படவுள்ள விளையாட்டுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் பிரதேசசபையினால் விநியோகிக்கப்பட்டுள்ளன,

கோப்பாய், புத்தூர், நீர்வேலி, அச்சுவேலி, உரும்பிராய் ஆகிய உப அலுவலக பிரிவுகளில் உள்ள சகல கழகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களை உடனடியாகப் பூர்த்தி செய்து மீண்டும் ஒப்படைக்கும்படி வலி. கிழக்குப் பிரதேசசபைத் தலைவர் கேட்டுள்ளார். (ஐ-4-180)

## யாழ். பழைய பூங்காவில் மிதிவெடி அகற்றும் பணி

யாழ். செயலகத்திற்கு முன்பாகவுள்ள பழைய பூங்கா வளவில் மிதிவெடியகற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கையில் ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தைச் சேர்ந்த இரண்டு நிபுணர் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

கோப்பாய், கொக்குவில் பகுதிகளிலும் மிதிவெடியகற்றும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவது தெரிந்ததே. (ஐ-5)

## கோயில் காணிகளில் வசிப்போர் நஷ்டஈடு பெறமுடியாத நிலை

வலி. வடக்கு, மார்ச் 23

யாழ். மாவட்டத்தில் கோயில் காணிகளில் குடியிருக்கும் மக்கள் வன்செயலினால் வீடுகள் சேதமடைந்தமைக்கான நஷ்டஈட்டைப் பெறமுடியாது சிரமப்படுகின்றனர்.

இத்தகையோர் கோயில் காணிகளில் கல்வீடு கட்டுவதற்கு வேண்டிய அனுமதியை உள்ளூராட்சி மன்றங்களிடம் பெறறு வீடுகளைக் கட்டி வாழ்ந்ததுடன் நிலத்திற்கான ஆதனவரியையும் தமது பெயரில் செலுத்தி வருகின்றனர்.

காணிக்குரிய கோயில்கள் இந்தியாவில் இருக்கக் கூடியதாகப் பல தலைமுறையினர் தொடர்ச்சியாக உரிய இடத்தில் வசித்து வருகின்றபோதிலும் அவர்களிடம் காணி உறுதி இல்லை.

இத்தகைய காணிகளில் குடியிருப்பவர்கள் தமது உடைந்த சேதமடைந்த வீடுகளுக்கு நஷ்டஈட்டைப் பெறுவதற்கு உதவி கிடைக்குமா என எதிர்பார்த்தபடி உள்ளனர். (ஐ-86)

## கப்பலில் தார் பரல்கள்

தனியாருக்கான ஒரு தொகுதி பொருள்களுடன் ''உகண'' கப்பல் கடந்த 19 ஆம் திகதி பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தக் கப்பலில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு ஆயிரத்து 700 தார்பரல்களும் எடுத்துவரப்பட்டுள்ளன. (ஐ-10)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் நாகமுத்து கணபதிப்பிள்ளை

மலர்வு: 16-06-1920 உதிர்வு: 22-02-2000

22-02-2000 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (23-02-2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு சகலவழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

- குடும்பத்தினர்.

33/3, பிறவுண் வீதி,
5 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (74690)

# பாதுகாப்புச் சபை உறுப்புரிமைக்கு அமெ. உதவியை நாடியது இந்தியா

## அதிபர் கிளின்ரனிடம் நேரில் கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 23

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமை பெறுவதற்கு இந்தியா அமெரிக்காவின் உதவியைக் கோரியுள்ளது.

இந்தியா வந்துள்ள அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனுக்கும் இந்திய ஜனாதிபதி கே.ஆர்.நாராயணனுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு நடந்த பேச்சுக்களின்போது இந்தக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஐ நா. பாதுகாப்புச் சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராகச் சேர்வதற்கு முயற்சி எடுத்துள்ளது. இதற்கு அமெரிக்கா உதவி செய்யவேண்டும் என்று நாராயணன் கிளின்ரனிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அதேசமயம் —

உலகிலேயே தென்னாசியாதான் மிகப் பயங்கரமான— மோசமான — இடம் என்று கிளின்ரன் அங்கு நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தக்கருத்தை இந்தியத் தலைவர்கள் மறுத்துள்ளனர்.

''போர் மேகம் சூழவில்லை தென்னாசியா அமைதியாக உள்ளது'' என்று அவர்கள் கருத்துக் கூறியுள்ளனர்.

இந்தியத் தலைவர்களின் இந்தக் கருத்தை கிளின்ரன் ஏற்றுள்ளார் எனக் கூறப்பட்டது. (ஐ 3)

## நேபாள அமைச்சரவை

காத்மண்டு, மார்ச் 23

நேபாளத்தில் புதிய பிரதமராக மீண்டும் பதவி ஏற்ற கிரிஜா பிரசாத் கொய்ராலா 35 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையை நேற்று அறிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சு உட்பட எட்டு அமைச்சுக்களை பிரதமரே பொறுப்பேற்கவுள்ளார். இன்று பிரதமரும் ஏனைய அங்கத்தவர்களும் சத்தியப்பிரமாணம் செய்து கொள்வர்.

இதேவேளை —

மாவோ கிளர்ச்சியாளர்களின் வன்முறையை முடிவுக்குக் கொண்டு வருவதே தனது முக்கிய பணியாகும் என கொய்ராலா தெரிவித்துள்ளார். (க)

## புனித பாப்பரசர் இஸ்ரேல் விஜயம்

டெல் அவிவ், மார்ச் 23

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் இஸ்ரேலுக்கு நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

டெல்அவிவ்வைச் சென்றடைந்த அவருக்கு அங்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

இஸ்ரேல் பிரதமர் எகுட் பராக்குடன் அவர் கலந்துரையாடினார்.

கிறிஸ்தவ — முஸ்லிம் இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் —

இரு மதத்தவர்கள் மத்தியில் இணக்கத்தை உருவாக்கவும் —

இந்தப் பயணம் உதவுவதாக வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவித்தன.

1967 ஆம் ஆண்டு இடம்பெற்ற மத்தியகிழக்கு யுத்தத்துக்குப் பின்னர் இஸ்ரேலுக்கு கத்தோலிக்க மத உயர் தலைவர் ஒருவர் விஜயம் மேற்கொண்டுள்ளமை இதுவே முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## அணுத்தடை ஒப்பந்தம் குறித்த பேச்சுக்கள் இணக்கமின்றி முடிவு

புதுடில்லி, மார்ச் 23

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இந்தியா கையொப்பமிட மறுப்புத் தெரிவித்து வருவது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்ரனும் இந்தியத் தலைவர்களும் விரிவாகப் பேச்சு நடத்தி உள்ளனர். எனினும் அதில் இணக்க நிலை ஏற்படவில்லை.

இந்த விவகாரம் தொடர்பாக கிளின்ரனுடன் இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன், பிரதமர் வாஜ்பாய் ஆகியோர் கலந்துரையாடினர்.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இதுவரை கையொப்பம் இடாத போதும் அணு ஆயுதங்களைக் கட்டுப்பாடாகவே பயன்படுத்துகின்றோம். ஆனால் இந்த ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டவர்கள் மோசமாக அதைப் பாவிக்கிறார்கள் என்று நாராயணன் கிளின்ரனிடம் தெரிவித்துள்ளார்.

### உலக அரங்கில்

இதேவேளை —

அமெரிக்க இந்தியத் தலைவர்களுக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுக்களின் போது —

★ காஷ்மீர் எல்லைக்கட்டுப்பாட்டுக் கோட்டை இந்தியா—பாகிஸ்தான் இருநாடுகளும் மதிக்க வேண்டும்.

★ எல்லைக்கு அப்பால் இருந்து வரும் பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்ற இவ்விருவிடயங்களிலும் இணக்கம் ஏற்பட்டது. இரு தரப்பும் பல உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திட்டன.

அவற்றின் முக்கிய உடன்படிக்கைகள் வருமாறு:-

★ இரு நாடுகளும் பொருளாதார, தொழில்நுட்ப வர்த்தக விடயங்களைப்பரிமாறிக் கொள்ளல்.

★ வருடா வருடம் உச்சி மாநாட்டை நடத்தல்.

★ இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்த கொள்கைகளைக் கலந்து பேசி வகுத்தல்.

★ பயங்கரவாதச் செயல்களை ஒழித்துக்கட்டல். (க-3)

## தெற்கு செச்சினியாவில் மீண்டும் கடுஞ்சண்டை

குறோஸ்னி, மார்ச் 23

செச்சினியாவின் தெற்கு மலைப்பகுதியில் ரஷ்யப்படைகளுக்கும் செச்சினியத் தீவிரவாதிகளுக்கும் இடையில்கடும் சண்டை மூண்டுள்ளது.

செச்சினியாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றிய பின்னர் அங்கு சிவில் நிர்வாகத்தைக் கொண்டுவர ரஷ்யா முயற்சி மேற்கொள்ளும் அதே நேரத்தில்—

ரஷ்யப்படைகளுக்கு எதிரான தாக்குதல்களைத் தீவிரவாதிகள் தீவிரமாக்கியுள்ளனர்.

தற்சமயம் வெடித்துள்ள புதிய சண்டைகள் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் குரோஸ்னியை விட்டு வெளியேறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம்—

ஏற்கனவே இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்கியுள்ள சுமார் 2 லட்சம் பேர் பெரும் கஷ்ட நிலையில் உள்ளதாகவும்—

அவர்களுக்கு உதவ சர்வதேச சமூகத்திடம் உதவி கோரப்பட்டுள்ளதாகவும்—

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் தெரிவித்துள்ளது.

குறோஸ்னியை புனரமைத்துக் கட்டி எழுப்பி அவர்களை மீளக்குடியமர்த்த பெருந்தொகையான நிதி செலவிட வேண்டியுள்ளது என்றும் —

இதன் காரணமாக அகதிகளுக்கு உதவ முடியாதுள்ளது என்றும்—

ரஷ்யா அறிவித்துள்ளது.

## மீண்டும் பேச்சை ஆரம்பிப்பதில் இந்தியாவின் நிலைப்பாடு முஷாரப்புக்கு தெரிவிக்கப்படும்

### டில்லியில் கிளின்ரன் தகவல்

புதுடில்லி, மார்ச் 23

பாகிஸ்தானுடன் மீண்டும் சமரசப் பேச்சுக்களை ஆரம்பிக்க இந்தியா விதித்துள்ள நிபந்தனை தொடர்பாக பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் முஷாரப்புடன் பேச்சு நடத்துவேன் என்று அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சமரசப் பேச்சுக்கள் தொடர்பாக இந்தியப் பிரதமருடன் கலந்துரையாடினேன். அவர் சில நிபந்தனைகளைத் தெரிவித்துள்ளார். அந்த நிபந்தனைகளை பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளருடன் பேசவிருக்கிறேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்

காஷ்மீர் எல்லைக் கோட்டை மதித்து பயங்கரவாத நடவடிக்கைகளை நிறுத்த பாகிஸ்தான் முன்வந்தால் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க இந்தியா தயாராகவிருப்பதாக தமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்றும்அவர் சொன்னார். (க-3)

## சீன - தாய்வான் உறவில் திருப்பம்

## சுதந்திர ஆதரவுக் கொள்கையைக் கைவிடுவதாக புதிய அரசு அறிவிப்பு

தாய்பேய், மார்ச் 23

தாய்வானில் பதவியேற்றுள்ள ஜனநாயக முன்னேற்றக் கட்சி சுதந்திர ஆதரவுக் கொள்கையைக் கைவிடுவதாக நேற்று அறிவித்துள்ளது.

கட்சியின் முக்கிய கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்ற சமயம் இதுவிடயமான முடிவு எடுக்கப்பட்டது.

தற்போதுள்ள சூழ் நிலையில் சுதந்திரம் கோருவது என்ற கொள்கையை கைவிடுவது என்றும் —

சீனாவுடன் சமரசப் பேச்சுக்களை ஆரம்பிப்பது என்றும் —

அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

முறிந்து போயிருந்த சீனாவுடனான வர்த்தகத்தை தாய்வான் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய தாம் தயாராக இருப்பதாக தாய்வானின் புதிய அரசு அறிவித்துள்ளது. [ஐ-3]

## இஸ்ரேல்-பலஸ்தீனப் பேச்சு மீண்டும் சுமுகமாக ஆரம்பம்

வாஷிங்ரன், மார்ச் 23

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான புதிய பேச்சுக்கள் வாஷிங்ரனுக்கு வெளியே விமானப் படை முகாமில் நேற்று முன்தினம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

இரு நாடுகளின் அதிகாரிகள் மட்டத்தில் இடம்பெறும் இந்தப் பேச்சுக்களில் பலதரப்பட்ட விடயங்கள் ஆராயப்பட்டு வருகின்றன என்றும்—

பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும்—

இருதரப்பும் தெரிவித்துள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட காஸா நிலப்பகுதியில் இருந்து இஸ்ரேல் துருப்புக்களை வாபஸ் பெறும் பணி தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று இஸ்ரேல் அரசு தெரிவித்துள்ளது. (ஐ-3)

## வன்செயல்நீடித்தது

புதுடில்லி, மார்ச் 23

ஜம்மு — காஷ்மீர் மாநிலத்தில் அனந்தால் மாவட்டத்தில் உள்ள கிராமம் ஒன்றில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தின் எதிரொலியாக நேற்று அங்கு வன்முறைகள் வெடித்தன.

அரச வாகனங்கள் பல தாக்கப்பட்டு சேதமாக்கப்பட்டன; டிரக் ஒன்று எரிக்கப்பட்டது; அரச அலுவலகங்கள் தாக்குதலுக்கு இலக்காகின.

மக்கள் வீதிகளில் இறங்கிப் பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

## ஜம்மு கொலைகளுக்கு பாகிஸ்தானே பொறுப்பு!

### இந்தியா குற்றச்சாட்டு

புதுடில்லி, மார்ச் 23

ஜம்மு-காஷ்மீரில் 35 சீக்கியர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு பாகிஸ்தானின் பயங்கரவாத அமைப்புக்களே பொறுப்பு என இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

ஜம்முவில் பதற்ற நிலையைத் தோற்றுவிக்க அவர்கள் இந்தக் கொலைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் இந்தியா குற்றஞ்சுமத்தியுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள பாகிஸ்தான் இந்தக் கொலைகள் தொடர்பாக பகிரங்க விசாரணை நடத்த வேண்டும் என்றும் —

அதன் மூலமே உண்மையான குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க முடியும் என்றும் — தெரிவித்துள்ளது.) (ஐ-3

# வெளிமாவட்டம் செல்ல பயண அனுமதி வழங்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், மார்ச் 23 யாழ்.குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம் மாதம் 22 ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:

### சங்கானை

(121815ஏ), (131776ஏ), (131776பி), (135668ஏ), (135668பி), (135841ஏ), (135883ஏ), (138096ஏ), (138096பி), (138096சி), (138125ஏ), (138238ஏ), (138247ஏ). (138260 ஏ), (138260 பி), (138263 ஏ), (138263 பி), (138263 சி), (138331 ஏ), (138331 பி), (138331 சி), (138359 ஏ), (138392 ஏ), (138393 ஏ), (138403 ஏ), (138403 பி), (138590 ஏ), (138821 ஏ).

### யாழ்ப்பாணம்

(136058 ஏ), (136059 ஏ), (136060 ஏ), (139855 ஏ), (139856 ஏ).

### கோப்பாய்

(136072 ஏ), (136114 ஏ), (136187 ஏ), (135323 ஏ), (136448 ஏ), (136448 பி), (136448 சி), (136469 ஏ), (136469பி), (136480ஏ), (136794ஏ), (139445ஏ), (139454ஏ), (139454பி), (139472ஏ), (139472பி), (139472சி), (139838ஏ) (139841ஏ), (139841பி),

### நல்லூர்

(128313ஏ), (128313பி), (128313சி), (128341ஏ), (128341பி), (128341சி), (128344ஏ), (128351ஏ), (128351பி), (128360ஏ), (128360பி), (128360சி), (128360டி), (136014ஏ), (136047ஏ), (136074ஏ), (136082ஏ), (136083ஏ), (136115ஏ), (136124ஏ), (136128ஏ), (136133ஏ), (136158ஏ), (136169ஏ), (136172ஏ), (136188ஏ), (136732ஏ), (136732பி), (136732சி), (136734ஏ), (138319ஏ), (138319பி), (138319சி). (138319டி), (138319ஈ), (138357ஏ), (139435ஏ), (139436ஏ), (13946பி)3, (139436சி), (139436டி), (139436ஈ), (139436எல்), (139452ஏ), (139452பி), (139452சி), (139464ஏ), (139480ஏ), (139840ஏ), (139929ஏ), (135978ஏ), (135978பி), (138124ஏ), (138124பி), (138189ஏ), (138220ஏ), (138220பி), (138236ஏ), (138307ஏ), (138368ஏ), (138420ஏ), (138438ஏ), (138509ஏ)

### சண்டிலிப்பாய்

(136157ஏ), (125440ஏ), (125440பி), (131702ஏ), (135541ஏ), (135698ஏ), (135781ஏ), (135781பி), (135781சி), (133781டி), (135791ஏ). (135937ஏ), (135937பி), (135937சி), (135976ஏ), (138141ஏ), (138141பி), (138156ஏ), (138172ஏ), (138172பி), (138188ஏ), (138249ஏ), (138322ஏ) (138325ஏ), (138371 ஏ). (138374ஏ), (138374 பி), (138382 ஏ), (138382 பி), (138388 ஏ), (138446 ஏ), (133454 ஏ), (138474 ஏ), (138538 ஏ), (138844 ஏ), (138954 ஏ), (138954 பி),

### தெல்லிப்பழை

(138294 ஏ), (139674 ஏ),

### உடுவில்

(134267 ஏ),(136129ஏ), (139471 ஏ), (139850 ஏ), (139851 ஏ), (139851 பி), (125426 ஏ), (125439 ஏ), (129500 ஏ), (130764ஏ), (131716)ஏ), (131716பி), (135481ஏ)' (135773ஏ), (135773பி)' (135840ஏ), (135844ஏ), (135844பி), (135844சி), (135880ஏ), (135880பி), (135936ஏ), (435936பி), (135936சி), (135959ஏ), (135968ஏ), (135968பி), (138147ஏ), (138147பி), (138176ஏ), (138304ஏ), (138304பி), (138305ஏ), (138306ஏ), (138306பி), (138330ஏ), (138345ஏ), (138367ஏ), (க)

# பாணின் நிர்ணய விலை குறித்து செயலக கூட்டத்தில் முடிவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 23 குடாநாட்டில் விற்பனை செய்யப்படும் பாணின் நிறை மற்றும் விலை போன்றவற்றில் மாற்றம் செய்வது தொடர்பாக நேற்று முன்தினம் யாழ். செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம், பாவனையாளர் பாதுகாப்புச் சங்கம் போன்றவற்றின் பிரதிநிதிகளும் உள்நாட்டு வியாபார பரிசோதகர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசின் பாண் ஒழுங்குவிதிகளின் கீழ் 450 கிராம், 225 கிராம் ஆகிய நிறைகளில் பாண் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்று கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது. ஆனால் 450 கிராம் பாணுக்கு விலை நிர்ணயம் செய்வது தொடர்பாக ஆராயப்பட்ட போது பேக்கரி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் கூட்டத்தில் கலந்து கொண்ட ஏனைய உறுப்பினர்களுக்குமிடையே வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டன.

இதனைத் தொடர்ந்து விலை நிர்ணயம் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ். குடாநாட்டில் தற்பொழுது 350 கிராம் நிறையுடைய பாண் 8 ரூபா 50 சதத்திற்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

(ஐ-5)

# புதுமுக மாணவர் 20 பேர் மீது பேராதனையில் 'ராகிங்'கொடூரம்!

பேராதனை, மார்ச் 23 பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தைச் சேர்ந்த புதுமுக மாணவர்கள் 20 பேர் கடந்த ஒரு மாத காலத்தினுள் 'ராகிங்' கொடூரத்துக்கு உள்ளாக்கப்பட்டதாகத் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த மாதம் 15 ஆம் திகதி புதிய கல்வி ஆண்டுக்கான விரிவுரைகள் ஆரம்பமானது முதல் பல்கலைக்கழகச் சூழலில் இந்த 'ராகிங்' கொடூரங்கள் நடைபெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'ராகிங்' கொடூரத்துக்கு உள்ளாக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டுள்ளனர் எனக் கண்டி ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

'ராகிங்' கொடூரத்துக்கு உள்ளானவர்களில் தமிழ், சிங்கள மாணவர்கள் அடங்குவர் எனவும் தெரியவந்தது.

இதேவேளை—

மேற்படி 'ராகிங்' சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸாரும் பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகப் பொறியியல் பீட மாணவன் செல்வன் வரப்பிரகாஷ் 1997 ஆம் ஆண்டு 'ராகிங்' கொடூரத்துக்கு ஆளாகி உயிரிழந்த பின்னர் இனிமேல் 'ராகிங்' நடவடிக்கையில் ஈடுபடுவதில்லை என்று பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் சத்தியப்பிரமாணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ஐ-7-க)

# தென்மராட்சியில் மொழிப் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 23 தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தமிழ் மொழிப் பயிற்சிகள் ஆரியபாஷா திராவிட அபிவிருத்திச் சங்கத்தினால் வழங்கப்படவுள்ளன.

(ஐ-10)

# பன்றித்தலைச்சி உற்சவம் ஆரம்பம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் உற்சவம் கடந்ததிங்கள் பக்தி சிரத்தையுடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து மார்ச் 27 ஆம் ஏப்ரல் 3 ஆம், 10 ஆம் திகதிகளில் பொங்கல் உற்சவம் நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்தையொட்டி ஆலயச் சூழலில் பேணப்பட வேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகள் யாவும் மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தினாலும் ஆலய தர்மகர்த்தா சபையினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (3-31)

# புகையிலை அறுவடை ஆரம்பம்

வடமராட்சிப்பிரதேசத்தில் புகையிலை அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

தரமான புகையிலைச் செடி ஒன்று அதி உச்ச விலையாக 75 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. ஆகக் குறைந்த விலையாக 50 ரூபாவாக புகையிலைச் செடி விற்பனையாகிறது.

வடமராட்சியில் புகையிலையைக் கொள்வனவு செய்வதில் வலிகாமம் பகுதி புகையிலை வியாபாரிகள் பெரிதும் அக்கறை காட்டவில்லை. உள்ளூர் வியாபாரிகளே இப்பிரதேசத்தில் புகையிலையைக் கொள்வனவு செய்து வருகின்றனர். (ஐ-173)

# நடமாடும் செயலக சேவை

தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் பிற்பகல் 3-00 மணி வரை மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் நடமாடும் செயலக சேவை இடம்பெறும்.

எழுதுமட்டுவாழ் தெற்கு, எழுதுமட்டுவாழ் வடக்கு, மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு ஆகிய நான்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள பொது மக்களால் முன்வைக்கப்படும் பிரச்சினைகள், தேவைகளை ஆராய்வதற்காக அன்றைய தினம் இந்த நடமாடும் சேவை நடத்தப்படவுள்ளது. (ஐ-30)

காரைநகர்

# தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம் அறிவித்தல்

20—02—2000 அன்று நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில், சேவையில் ஈடுபடும் சிற்றூர்திகள் மட்டுப்படுத்தப்பட்டு மேலும் சிற்றூர்திகளை மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாகச் சேவைக்கு இணைப்பதில்லை என்றும் பொதுச் சபையினால் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிற்றூர்திகள் கொள்வனவு செய்ய விரும்புவோர் எமது நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு அனுமதிபெற்ற பின்பே கொள்வனவு செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே எமது சங்கத்தின் கீழ் சேவையிலீடுபடுத்துவதற்கு சிற்றூர்திகளை சங்க அனுமதியின்றிக் கொள்வனவு செய்ய வேண்டாமென்று கேட்டுக் கொள்வதுடன் சேவைக்குச் சிற்றூர்திகள் தேவைப்படுமிடத்து எம்மால் அறிவிக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

S.T. சிங்க அரியரட்ணம் — தலைவர்

சி. இரவீந்திரன் — செயலாளர்

[74277]

# மரண அறிவித்தல்கள்

## K. T. சோமலிங்கம்

(இளைப்பாறிய சிரேஷ்ட மேற்பார்வையாளர் சிறு கைத்தொழில் திணைக்களம்)

வண்ணார்பண்ணை, சிவலிங்கப் புளியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட கே.ரி. சோமலிங்கம் அவர்கள் 13-03-2000 அன்று இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு சின்னப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, சின்னையா, சுந்தரம்மா மற்றும் செல்லத்துரை ஆகியோரின் சகோதரரும் வசந்தாதேவியின் (மாதனை) அன்புக் கணவரும், ஜெயக்குமார் (இந்தியா), ரவிக்குமார் (பிரான்ஸ்), திருக்குமார் (பிரான்ஸ்), சந்திரகுமார் (ஜேர்மனி), நிர்மலா, வக்சலா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உஷாதேவி (இந்தியா), நெத்தலியா (பிரான்ஸ்), ரஜனி (ஜேர்மனி), செந்தில்நாதன் (தேவன் - இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனும் மதுரா, சாரா, பாலிகாதேவி, பிரதீப்குமார், வசந்தகுமார், அரவிந்குமார், பிரசன்னா, சோமேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மடிப்பாக்கம் இந்தியாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

கலாபூஷணம் க.ந. கணபதிப்பிள்ளை [சின்னமணி] (மைத்துனர்.)

'கலையகம்
அச்சுவேலி.

(74721)

## அருட்செல்வி மேரி கொண்செப்ரா கந்தர் கணபதிப்பிள்ளை (தி.கு)

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கந்தர் கணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதிகளின் மகளும் யாழ். திருக்குடும்ப சபையின் துறவியுமாகிய அருட் செல்வி மேரி கொண்செப்ரா கணபதிப்பிள்ளை 22-03-2000 புதன்கிழமை யாழ். திருக்குடும்ப மாகாண இல்லத்தில் காலமாகிவிட்டார்.

இவரது பூதவுடல் இன்று (23.03.2000) வியாழக்கிழமை பி. ப. 3 30 மணிக்கு தி.கு மாகாண இல்லத்திலிருந்து யாழ். புனித மரியாள் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பி. ப. 4.00 மணிக்குத் திருப்பலிப் பூசையின்பின் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அருட்தந்தையர், அருட்சகோதரிகள், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:-

சிஸ். அருள் தி.கு

தி.கு. மா, இல்லம்,
121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,

(74719)

## திருமதி கந்தசாமி பராசக்தி

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் வன்னேரிக்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி பராசக்தி 18.03.2000 அன்று வன்னேரிக்குளத்தில் காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராஜா (நடேசன்), மற்றும் திருமதி கமலசேகரம், மகேஸ்வரி, [வன்னி] குணபாலன் [மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் .வவுனியா], சிவபாலன் [உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் - யாழ்ப்பாணம்] ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வன்னேரிக்குளத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-

சி. கந்தசாமி (கணவர்)
க. சிவபாலன் (மகன்)

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

[74719]

# உதயன்

## தீராத ஆசை

தமிழர்களைப் பொறுத்த வரையில் 'உடனிருந்து கொல்லும் வியாதி' என்று சொல்லத் தக்கவை பல. அவற்றுள் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் அரசாங்கத்தினால் நடத்தப்படும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் முதலாவது வியாதி என்று சொல்லலாம்.

தமிழர்களுக்குப் பாரம்பரிய தாயகம் என ஒன்றிருக்கவில்லை என்று கட்டுரை எழுதும் சிங்களக் கடும் போக்காளர்கள் இன்னமும் இருக்கிறார்கள். இதனை நடைமுறையில் நிறுவி விட வேண்டும் என்பதில் தென்னிலங்கை அரசியல் வாதிகள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே 'அக்கறை' கொண்டார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள மக்களைக் குடியேற்றி இன விகிதாசாரத்தை மாற்றிவிட்டால், தமிழர் தாயகத்துக்கு உரிமை கொண்டாடுவதை நிறுத்திவிடலாம் என்பது அவர்களின் உத்தியாக — சதித்திட்டமாக — இருந்தது.

ஆட்சி அதிகாரமும், தேவையான ஏனைய பல வகைப் பலங்களும் வளங்களும் அவர்களின் கைகளிலேயே — பிடியிலேயே — இருந்ததால், நீர்ப்பாசனத் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் — போர்வையில் — தமது ''இலட்சியத்தை'' நிறைவேற்றி உள்ளனர். முழுக்க முழுக்கத் தமிழ்ப்பிரதேசங்களாக இருந்த பூமிகளில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர்க் காணியைக் கபளீகரம் செய்து சிங்கள மக்களைக் குடியேற்றி கிழக்கின் இனவிகிதாசாரத்தை ''வெற்றிகரமாக'' மாற்றி உள்ளனர்!

இலங்கையின் ஆகப்பிந்திய குடிசன மதிப்பீடு 1981 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம் கிழக்கில் சிங்கள மக்களின் விகிதாசாரம் 24. 9 ஆக இருந்தது. ஆனால் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த சிங்கள மக்களின் விகிதாசாரம் 8 மட்டுமே. இப்போது குடிசன மதிப்பீடு ஒன்று நடத்தப்பட்டாலோ, கிழக்கில் சிங்கள மக்களின் விகிதாசாரமே மேலே நிற்கும் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

எனினும், இலங்கை சிங்கள மக்களுக்கு மட்டுமே சொந்தம் என்ற கொள்கை உடைய கடும்போக்காளர்களின், தமிழ், முஸ்லிம் மக்களின் பூமிகளைக் கிழக்கில் கபளீகரம் செய்யும் ஆசை இன்னும் தீரவில்லை!

திருகோணமலை மாவட்டத்தில் காலங்காலமாகத் தமிழ்க் கிராமமாக இருந்த கராச்சிக்குடா இப்போது ஆளுங்கட்சிப் பிரமுகர் ஒருவரின் ஏற்பாட்டில் சிங்களக்கிராமமாக்கப்பட்டு வருவது —

தமிழ் மண்ணை இவ்வளவுக்கு அபகரித்தும், இன்னும் ஆசை தீரவில்லை என்பதனையே எடுத்துக்காட்டுகிறது!

இந்த இலட்சணத்தில்தமிழர் தாயகத்தை அங்கீகரித்து உரிமைவழங்கும் தீர்வு ஒன்றை இனப்பிரச்சினைக்குக் காண முடியும் என்று எவ்வாறு எதிர்பார்ப்பது?

ஆனால் தமிழர் தாயகம் குறித்த கருத்து ஒற்றுமை இல்லாமல் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கடினமான காரியமாகவே இருக்கும். இப்போதுள்ள நிலையில் வைத்துத் தமிழ், சிங்களப் பிரதேசங்களை நிர்ணயிக்க முனைவதன் மூலம், தமிழர் தாயகம் குறித்த விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவது இயலாத காரியம். ஆகையால் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முயற்சிகள் இதனைக் கண்டும் காணாததும்போல தாண்டிச் செல்ல முனைதலாகாது.

# மனிதவாழ்வு அனுபவங்களை எழுத்தில் வடித்த டானியல்

மூத்த எழுத்தாளர் அமரர் கே. டானியலின் 14 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகுறேது.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களில் டானியலின் எழுத்துப் பணியை மதிப்பிடும் போது அவரது முழுமையான ஆளுமை புலப்படுகின்றது. சாதாரண மக்களின் நடைமுறைகளைக் கூர்மையாக அவதானித்து அந்த நடைமுறைகளைப் பொருத்தமாகத் தனது நாவல்களிலே வடித்து வைத்தவர் டானியல். அவருடைய எழுத்துக்கள் மனித வாழ்க்கை அனுபவங்களாக அமைந்தமையால் காலத்தால் அழியாத பண்புடையன. நாவல் என்ற மேலைத்தேய இலக்கிய வடிவத்தின் பூரணமான அமைப்பை டானியலின் நாவல்கள் பிரதிபலிக்கவில்லை என்ற இலக்கியவாதிகளின் கருத்து ஒருபுறமிருக்க, டானியல் நாவல்களைப் பண்பாட்டுத் தரவுகளாகக் காணும் ஆய்வாளர்கள் அந் நாவல்களின் வடிவ அமைப்பைக் கவனிக்க வேண்டிய தேவையில்லாமற் போய்விடுகின்றது.

சமூகவியல் ஆய்வாளர்கள் தரவுகளை இலக்கியங்களிடையே தேடிச் செல்லும் போது இலக்கியங்களின் வடிவம் பற்றியும்ஓரளவு தெரிந்து கொண்டே அவற்றைத் தேடிப்போக வேண்டும். எனினும், சிலவேளைகளில் வடிவம் பற்றிய ஆய்விலே தம்முடைய கவனத்தைச் செலுத்தாது. தரவுகளின் தேட்டம் நோக்கி நாவல்களிடம் சமூகவியலாளர் போக வேண்டிய தேவையுமுண்டு. ஆய்வுத் தரவுகளின் பதிவு மொழிநடையால் சிறப்புற விளங்கும். டானியலின் நாவல்களிலும் சிறுகதைகளிலும் அம்மொழிநடையின் தனித்துவத்தால் தரவுகளும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இத்தரவுகள் ஆய்வுகளுக்கும் பயன்பட வேண்டியவை என்ற ஓர் எண்ணம் நாவலையோ சிறுகதையையோ எழுதும்போது டானியலுக்கு இருந்தது என்பதை அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் அனைவருமே அறிவர்.

அவரது முன்னைய நாவல்களில் உள்ள தரவுகள் பற்றிய விளக்கங்களை மேலும் தெளிவாகவும் விரிவாகவும் அறிவதற்காக வெளிநாட்டு ஆய்வாளர் சிலர் கடிதமூலம் அவருடன் தொடர்பு கொண்டனர். இத்தகைய தொடர்புகள் டானியலைப் பிற்கால நாவல்களிலே மேலதிகத் தகவல்களைக் குறிப்பிடவைத்தன என்றும் கூறலாம்.

'அடிமைகள்' நாவல் தொடக்கம் அதன் பின்னர் அவர் எழுதிய நாவல்கள், குறுநாவல்கள் யாவும் இவ் ஆய்வுநிலைத் தரவுகளை ஆவணப்படுத்துவதிலே முன்நிற்கின்றன. இது காரணமாக நாவல் வடிவமைப்புச் சீர்குலைய நேர்ந்தது என்றுங் கூறுவதற்கில்லை. யாழ்ப்பாணத்து நடைமுறைகளைப்பற்றிய விளக்கங்களை நாவலின் கதையினூடாகவே டானியல் வெளிப்படுத்தியுள்ளார். கதாபாத்திரங்களின் உரையாடல்கள் மூலமாகத் தரவுகள் பொருத்தமாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாகப் பெண் பாத்திரங்களின் மொழிநடையில் நடைமுறைகளைப் பற்றி டானியல் விளக்கும்போது பாத்திரப் படைப்பும் சிறப்புப்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்து மண்ணின் குரலாக டானியலின் நாவல்கள் அமைய இதுவே காரணமாகின்றது. டானியலுக்குப் பின்பு இத்தகைய பண்பாட்டு விளக்கத்துடன் நாவல்கள் இன்னும் வெளிவரவில்லை.

### இன்று அவரது நினைவு தினம்

டானியல் மறைந்து பதினான்கு வருடகால இடைவெளியில் அவரது 'கானல்', 'தண்ணீர்', 'பஞ்சகோணங்கள்' என்ற நாவல்களும் 'டானியல் குறுநாவல்கள்' என்ற தொகுப்பும் வெளிவந்துள்ளன. 'கானல்' 'பஞ்சகோணங்கள்' நாவல்கள் இந்தியாவிலே பிரசுரமாயிற்று ஏனைய இரண்டும் இலங்கையிலே பிரசுரமாயின. அவருடைய நூல் வடிவு பெறாத குறுநாவல்கள் இன்னும் சில உள. குறிப்பாக, அவர் எழுதிய ''சாநிழல்'' என்ற குறுநாவல் வெளிவர வேண்டியது அவசியம். டானியல் என்ற எழுத்தாளனின் இறுதிப்படைப்பு என்றசிறப்பு அதற்கு உண்டு. இன்னும், அதன் தலைப்பு டானியலின் இறுதிக்கால கட்டத்து மனநிலையைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்திருக்கலாம். அக்குறுநாவலின்பிரதி துரதிர்ஷ்டவசமாக எங்கோ ஒரு மூலையிற் கிடக்கின்றது. அதை யாராவது தேடியெடுத்துப் பிரசுரிக்க வேண்டும். இன்னும் ''சாநிழல்'' என்ற தலைப்பில் இரண்டு குறுநாவல்கள் அவர் எழுதியுள்ளார் எனவும் அறியக் கிடக்கின்றது. அவ்வாறு இரண்டு குறுநாவல்களை அவர் எழுத வேண்டிய தேவை என்னவென்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒன்று இலங்கையில் அவர் இருக்கும் போது எழுதியதாகவும் மற்றையது இறுதிக்காலத்தில் இந்தியாவில் அவர் இருக்கும் போது எழுதியதாகவும் அறிகிறோம். ஓர் எழுத்தாளனுடைய பணிகளைப் பற்றி அவன் வாழுங் காலத்திலேயே நாம் பெரிதும் சிந்திப்பதில்லை. அந்த எழுத்தாளன் மண்ணுலகிலிருந்து மறைந்த பின்பும் சிந்திக்காமல் இருப்பது தவறு எழுத்துப் பணியால் பல தேவைகளை நிறைவேற்றும் ஆற்றல் எழுத்தாளனுக்கு உண்டு. அவ்வாற்றல் அவன் வாழும் காலத்திலே பிறரால் மதிக்கப்படாத போதும் மறைந்த பின்னராவது நினைக்கப்பட வேண்டும். கடந்த பதினான்கு வருடகாலங்களில் பல தடவைகள் டானியலின் இழப்பை எண்ணி நாம் வருந்தியிருக்கிறோம். ஆய்வு நிலையிலே பல சந்தேகங்களைத் தெளிவுபடுத்த அவருடன் கலந்தாலோசிக்க முடியவில்லையே என்ற மனவருத்தம் எம்மை விட்டு என்றுமே அகலாது. செம்பொங்கல் பற்றிய கட்டுரையைப் பார்த்த பேராசிரியர் ஒருவர் யாழ்ப்பாணத்திலே செந்நெல் இருந்ததா என்று கேட்கின்றார். இவ்வேளைகளிலே நான்டானியல் யாழ்ப்பாண நடைமுறைகள் சிலவற்றை யாவது ஆவணப்படுத்தி வைத்துள்ளார் என்றாவது எண்ண வேண்டியுள்ளது. இன்று டானியல்தன்நாவலில் குறிப்பிட்டுள்ள சில நடைகளிலே முறைகளைப் பற்றி நேரிற் போய் அறியவும் வாய்ப்பில்லை. ஏனெனில் அந்நடை முறைகள் பல நாகரிகமற்றவையெனக் கருதப்பட்டுக் கைவிடப்பட்டுள்ளன. பல நடை முறைகளைக் குறிக்கும் தமிழ்ச் சொற்களின் இடத்தைப் பிறமொழிச் சொற்கள் பிடித்துக் கொண்டு உள்ளன. பேச்சு வழக்கிலே இருந்த பல விடயங்களைப் பற்றிய தகவல்களையும் விளக்கங்களையும் தரத்தக்க நடமாடும் நூலகமாக இருந்த தோழர் கே. டானியலின் மறைவு பெரியதோர் இழப்பாகும், எனினும் அவர் காட்டிச் சென்ற வழியிலே யாழ்ப்பாணப் பண்பாட்டுத் தகவல்களைத்தேடி அவற்றை ஆவணப்படுத்த நாம் எம் உழைப்பை நல்க வேண்டும். அதுவே டானியலின் பெயர் என்றும் நிலைக்கவும்எம் பணி சிறக்கவும்வழிசெய்யும். ★

பேராசிரியர்
அ. சண்முகதாஸ்

## நாளை

பங்குனி 11
வெள்ளிக்கிழமை
திதி: சதுர்த்தி
முற்பகல் 11.44 வரை.
நட்சத்திரம்: விசாகம்
முன்னிரவு 7.52 வரை
சுபநேரம்: 6.15 – 7.45
இராகுகாலம் 10 45 – 12.15
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

நாம் அனைவரும் புதிய விஷயங்களை ஆராய்ச்சி செய்பவர்களாக இருக்க வேண்டும். பிறரை, கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றும் பேதைமையை ஒழிக்க வேண்டும்.

-இங்கர்சால்

## போட்டிகள்

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் இந்த வருடமும் கிளித்தட்டுப் போட்டிகள் கோட்ட வலய மட்டங்களில் நடத்தப்பட உள்ளன.

இந்தப் போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை வலய அலுவலகங்கள் மேற்கொண்டுள்ளன.

(க-133)

## தவக்காலச் சிந்தனை

(பதினாறாம் நாள்)

எனக்குள்ளது எல்லாவற்றையும் நான் வாரி வழங்கினாலும் எரிப்பதற்கு என் உடலைக் கையளித்தாலும் அன்பு இல்லையேல் எனக்குப் பயன் ஒன்றும் இல்லை. மனித வாழ்வின் அடிப்படைத் தேவையில் ஆழமாகப் பதிந்திருப்பது அன்பு. அன்புக்காக ஒருவரை ஒருவர் எதிர்பார்த்தபடியே வாழ்ந்துகொண்டிருக்கின்றது மனித சமுதாயம். இன்றைய நற்செய்தியில் பார்க்கின்றோம். செல்வந்தன் தனது வாழ்விலே இன்பமுடன் குதூகலமாக வாழ்ந்தான். ஆனால் அவன் அண்டையில் அன்பற்ற நடைப்பிணமாக வாழ்ந்த வாசரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. நாமும் எமது வாழ்விலே நானும் எனது குடும்பமும் மட்டும் என்று வாழ்ந்தால் போதும்; மற்றவர்கள் எக்கேடு கெட்டாலும் அதனைப் பொருட்படுத்த வேண்டியதில்லை என்று வாழவில்லையா? மற்றவர்களில் உள்ள தீய செயல்களைச் சுட்டிக்காட்டுகின்றோம்; ஆனால் அவர்களில் உள்ள சிறப்புகளைப் பாராட்டுவதில்லை. எமது சமூகத்திலும் பட்டம், படிப்பு, பணம் என்ற மமதையுடன் வாழ்வோரும் ஏழைகளாக ஒதுக்கப்பட்டவர்களாக வாழ்வோரும் உள்ளனர். அதேபோன்று குடித்து மகிழ்வோரும் உணவின்றி மடிவோரும் எம்மத்தியில் உளர். இத்தகையவேற்றுமைகள் நீங்கி, உண்மை, அன்பு எம் மத்தியில் உருவாகி, மறுவாழ்விற்கு இன்பத்தைத் தேடுபவர்களாக வாழ இத் தவக்காலத்தைப் பயன்படுத்துவோமாக.

எஸ். மரியநாயகம்
(தாளையடி)

## சாயி சிந்தனை

அன்பின் வடிவங்களே! நாம் தெய்வீகத்தைப் பற்றிப் பேசுகிறோம். இது என்ன தெய்வீகம்? அன்பின் தத்துவமே தெய்வீகம். எல்லாவற்றிற்கும் ஆதார சக்தியாக விளங்குவது அன்பு மட்டுமே! எத்தனையோ வகை இனிப்புகள் இருக்கின்றன. மைசூர்ப்பாகு, குலாப்ஜாமூன் எனப் பலவகை. அனைத்திலும் காணப்படுவது சர்க்கரை மட்டுமே! மைசூர்ப்பாகு, குலாப் ஜாமூன் எல்லாம் சர்க்கரையின்றி எங்கு வரும்? அதைப்போன்றே இந்த அமுதமான அன்பின் இனிய சுவை அனைத்து மதங்களிலும் நிறைந்திருக்கிறது.

நாம் அன்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். அன்பைத்தவிர பெரியது வேறொன்றும் இவ்வுலகில் இல்லை. நம் வாழ்வை அன்பிலேயே முடித்துவிட வேண்டும். நம்மிடம் அன்பு இருக்கும்போது தான் நாம் உதாரண புருஷர்களாக விளங்கமுடியும். நாம் அன்பை வளர்த்துக்கொள்ள வேண்டும் எனப் பகவான் விரும்புகிறார். அன்புத் தத்துவமே சாயியின் வேதம். இத்தகைய அன்பினால் நமது வாழ்க்கை மிகப் பிரகாசமாக ஒளிரும். எந்தக்காரணத்தைக் கொண்டும் அன்பிற்கு வறட்சி இருக்கவே கூடாது. அகன்று விரிந்த கடலைப்போன்று அன்பு அத்துணை பரந்து இருக்கவேண்டும்.

ஆதாரம்:- சனாதனசாரதி

# சின்னஞ்சிறு விளம்பரம்

### கண்டெடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம் கன்னா திட்டி மக்கள் வங்கிக்கு உரிய (இலக்கம் 2203) காசோலை ஒன்று முத்திரைச் சந்தையில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். தொடர்பு:- ஐ. முருகதாசன் (யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்), 49, கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
(74720)

### கோழித்தீன் விற்பனை

Prima கோழித்தீன் மூடையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் அளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (74671)

### புறொயிலர் குஞ்சுகள்

பிறிமா புறொயிலர் குஞ்சுகள் 23 ஆம் திகதி விநியோகிக்கப்படும். ஓடர்களை முன் கூட்டியே பதிவு செய்யவும். பிறிமா பேட்டுக்குஞ்சுகளுக்கு முன் பதிவு எடுக்கப்படும். தொடர்பு: S. கண்ணா, இல. 31 மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் அளவு. (74665)

### கற்பித்தல்

ஆண்டு 1 — 5 வரை (புலமைப் பரீட்சை உட்பட) 3 கிலோ மீற்றர் சுற்றாடலுக்குள் வசதிக்கு ஏற்ற வகையில் வீடுகளுக்கு வந்தோ அல்லது தனியார் கல்வி நிறுவனங்களுக்கோ அதிகாலையோ மாலையோ வந்து சகல பாடங்களும் கற்பிக்கப்படும். தொடர்பு:- த. இராமநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்), பூம்பத்தை வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
(74654)

### திருத்த வேலைக்கு

சகலவித கமராவகைகளும் எலக்ரோனிக் பிளாஷ் கண், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத் துறைசார்ந்த ஏனைய துணைக் கருவிகளும் திருத்திக் கொடுக்கப்படும். சு. நாராயணசாமி, இல. 301 கஸ்தூரியார் வீதி, மேல்மாடி. (கன்னாதிட்டிச்சந்திக்கு அருகில்) (74441)

## விவசாய சம்மேளன கூட்டம்

சண்டிலிப்பாய், மார்ச் 23

மாதகல் விவசாயிகள் சம்மேளனத்தின் கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாதகலிலுள்ள பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை மண்டபத்தில சம்மேளனத் தலைவர் க. வீரவாகு தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பிரதம அதிதியாக முன்னாள் சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலர் கா. சந்திரராசா, கமநலச் சேவைகள் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக வலி. தென்மேற்கு பிரதேச சபை தலைவர் வெ. அன்ரன் ஜோன்சன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் வே. கனகரத்தினம், கீரிமலைப் பிரிவு விவசாய போதனாசிரியர் எஸ். விஜயரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்வார்கள். விவசாயிகளுக்கான ஒய்வூதியத் திட்டம் இக் கூட்டத்தில் அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(க-135)

## 31 ஆம் நாள் இதய அஞ்சலி

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு)

திருமதி கோமளா திருநாவுக்கரசு அவர்களின் அன்பு மகன்

### திருநாவுக்கரசு சுதர்சன்

அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம் அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்புக் கடன் நிவர்த்திச் சங்க அங்கத்தவர்கள்.

[74722]

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச சபை உறுப்பினர் சி. சண்முகநாதனின் மைத்துனரும் பிரதேச சபை சாரதி குகனின் அன்புத் தந்தையுமான

### நமசிவாயம் நடராசா (லிங்கம்)

அவர்களின் மரணச் செய்தி அறிந்து ஆழ்ந்த கவலையடைவதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், உறுப்பினர், செயலாளர், ஊழியர்கள்.

பிரதேச சபை நெடுந்தீவு.

(சி/11504)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



### அமரர் பெரியதம்பி மயில்வாகனம்

[பண்டிதர், இளைப்பாறிய அதிபர்]

கண் மகிழ 16—11—1916

கண் நெகிழ 19—01—2000

ஆளாக்கி வைத்த
எங்கள் அரிய பிதா பொன்னடிக்கே ..........

ஆவி உள்ளவரை அறவழியில் நின்றுழைத்து
அரியகலை அறிவன்பு அடக்கமுடன்
தேவை உணர்ந்தெமக்குச் செய்பணிகள் பலவாற்றி
தித்திக்கும் வாழ்வு தந்து திடந்தந்து
புவியிலுயரவைத்த புதுமையினர் புகழாளர்
புன்னகையா லுலகளந்த பொறையாளர்
தேவபக்தி ஏழை பணி சமூக உயர்வுபணி
செய்தே யுயர்ந்திட்ட செம்மலவர்
அரிய எங்கள் தந்தை பதம்
அன்புடனே பணிந்திங்க
அருமலரை அர்ப்பணித்தோம் அமைதிகொள்!

19—01—2000 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத்தலைவரின் இறுதிக் கிரியைகளில் பங்கு கொண்டும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''பூம்புகார்'',
மீசாலை.

[74733]

## பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் 14 பாதுகாப்பு ஊழியர்கள் உண்ணாவிரதம் இருக்க முஸ்தீபு

யாழ். பல்கலைக்கழகத்தினால் ஒரு வருடத்திற்கு முன் நியமனம் செய்யப்பட்ட 14 பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் தம்மைப் பதவியிலிருந்து நீக்கும் உத்தேச நடவடிக்கைகளை எதிர்த்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதற்குமுஸ்தீபுசெய்து வருவதாக அறியப்படுகிறது.

இது குறித்துத் தெரியவருவதாவது:

1998 ஜனவரி முதலாம் திகதி இந்தப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தற்காலிக நியமனம் வழங்கப்பட்டது.

ஆறு மாதங்களின் பின் இவர்களது வேலை விசுவாசம், ஒழுங்கு ஆகியவற்றைப் பரிசிலித்து நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஆறு மாதங்களின் பின் மேலும் ஆறு மாதங்கள் இவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் தற்காலிக நியமனத்தின் கீழ் கடமையாற்றப் பணிக்கப்பட்டனர்.

தற்பொழுது நிரந்தரமாக்கப்படாதநிலையில்பல்கலைக்கழகத் தொழிற்சங்கம் இவர்களின் நியமனத்துக்குஎதிர்ப்பு தெரிவித்ததையடுத்து இவர்களை வேலையிலிருந்து நீக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். செயலகத்திலுள்ள வேலை வங்கியில் பதிவு செய்யப்பட்டு, நேர்மையான முறையில் நியமனம் செய்யப்பட்ட தம்மை வேலையிலிருந்து நிறுத்துவது நீதியற்றது எனத் தெரிவித்து பிரஸ்தாப பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனைவரும் பல்கலைக்கழக வாயிலில் உண்ணாவிரதம்இருக்க முடிவு செய்தனர்.

இவர்களின் போராட்டம் தொடர்பாக அறிந்து கொண்ட யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை இந்த விவகாரத்தில் தலையிட்டு இம் மாதம்25 ஆம் திகதி நடைபெறும் பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தின் பின் இது விடயத்தில் முடிவு ஒன்றைத் தெரிவிப்பதாக உறுதி அளித்ததை அடுத்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. (ஜ-5-10)

யாழ். மாவட்ட

## சிகை ஒப்பனையாளர் சங்க முக்கிய அறிவித்தல்

25 - 03 - 2000 சனிக்கிழமை யாழ். நகரில் நடைபெற இருக்கும் மாபெரும் சமாதானப் பேரணியில் கலந்து கொள்ளும் பொருட்டு சகல நிலையங்களையும் அன்றையதினம்மூடி உறுப்பினர்களை நல்லூர் ஆலய முன்றலில் காலை 9 மணிக்கு ஒன்று கூடி கலந்து கொள்ளும்படி தெரிவித்துக்கொள்கின்றோம்.

- நிர்வாகம்

30, நவீன சந்தை,
மேல்மாடி, யாழ்ப்பாணம். (74731)

## நல்லூர் லயன்ஸ் கழகத்தின் மருத்துவ முகாம்

காலம்: 25-03-2000 சனிக்கிழமை காலை 8.30 - 1.30 வரை

இடம்: ஸ்ரீ சத்தியசாயி பஜனை / சேவா நிலையம், கல்வியங்காடு. 331, ஞானியர் மண்டபம், ஆடியபாதம் வீதி, நல்லூர்.

இரத்த அழுத்தம், சலரோகம், கண்பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும்.

தொடர்பு: லயன் வி. பரமசிவம், நல்லூர்.

லயன் தி. சற்குணராசா M.J.F.
தலைவர்,
நல்லூர் லயன்ஸ் கழகம்.

(சி/ 11505)

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர் திரு. ப. சாந்தகுமார் அவர்களின் அன்புத் தாயார்

### மகேஸ்வரி பராஜசிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர் சபை, பணியாளர்கள்,
யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம்,
கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
யாழ். பட்டணக்கிளை.

[74730]

# தமிழ்ப்பிரிவு பிரதேச செயலகத்தை தரமுயர்த்த நடவடிக்கை எடுக்குக!

## ஜனாதிபதிக்கு பெருமாள் கடிதம்

கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துவதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளவேண்டும்

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் வடக்கு - கிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப்பெருமாள் கோரியுள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டின் சகல பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்படும் வசதிகள் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் எனக்கோரி கடந்த 20 ஆம் திகதி மேற்படி பிரதேச செயலகத்தின் முன்னால் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்களாலும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் உடனடியாகத் தலையிடுவதோடு இந்தச் செயலகத்தைத் தரமுயர்த்துவதற்கான பணிப்புரைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கவேண்டும்.

இந்தத் தரமுயர்த்தலுக்கான நடவடிக்கைகள் பூர்த்தியானதும் பிரதேச செயலகம் செயல்படுவதற்கான கட்டட வசதிகள் மற்றும் ஏனைய வசதிகளையும் வழங்கி உதவ வேண்டும்—

இப்படி அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-க)

# ரெலோவும் அறிக்கை

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தைத்தரம் உயர்த்தி நிரந்தரமாக அது இயங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ரெலோ அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கல்முனை பிரதேச செயலகம் இப்பிரதேச மக்களின் நீண்டகாலக் கோரிக்கையின் நிமித்தம் 1989 ஏப்ரல் 12 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

1993 ஜூலை 28 ஆம்திகதி கூடிய அமைச்சரவையின் தீர்மானத்தின் படி இப்பிரதேச செயலகத்தை நிரந்தரமாக்குவதற்கான ஒழுங்குகளைசெய்யுமாறு உள்ளூராட்சிமாகாண சபைகள் அமைச்சின் செயலாளரினால் அனுப்பப்பட்ட— 1993 ஒகஸ்ட் 9 ஆம் திகதி இடப்பட்ட— கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இப்பிரதேச சபை நிரந்தரமாக்கப்படவில்லை.

சனத்தொகை குறைவாக இருக்கும் பல பிரதேச செயலகங்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளன. அத்துடன் 6 ஆயிரத்து 722 குடும்பங்களை சேர்ந்த 29 ஆயிரத்து 579 பேரைக் கொண்டிருக்கும் இப் பிரதேசசபை தனியாக பிரிக்கப்படாமல் உள்ளமை இப்பிரதேச தமிழ்மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்பதையே காட்டுகிறது.

பொதுநிர்வாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சு கல்முனை தமிழ் மக்களின் நீண்டகாலக்கோரிக்கையை கருத்தில் கொண்டு இப்பிரதேச சபையை நிரந்தரமாக்குமாறு கோருகின்றோம்.

இப்பிரதேச சபை நிரந்தரமாக்கப்படாத விடத்து கல்முனை பிரதேச மக்களின் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்குவதுடன் அனைத்துப் பங்களிப்பையும் ரெலோ இயக்கம் வழங்கும்.

இப்படி அந்த பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5-3)

# 14 உள்ளகப் பயிற்சி டாக்டர்கள் யாழ். ஆஸ்பத்திரிக்குநியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ் ஆஸ்பத்திரிக்கு 14 உள்ளகப் பயிற்சி டாக்டர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

இன்று முதல் இவர்கள் கடமையேற்க உள்ளனர்.

யாழ்.மருத்துவபீட இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த 60பேரில் 14பேர் யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்ற விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் கடமையாற்றத் தொடங்கியதும் ஆஸ்பத்திரியில் நிலவும் டாக்டர்களுக்கான பற்றாக்குறை ஓரளவு நீங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (ஐ-139-15)


## யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரி

### தற்காலிக விரிவுரையாளராக இணைப்புப் பெறுவதற்கான

# விண்ணப்பம் கோரல்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள யாழ்ப்பாணம் தேசியக் கல்வியிற் கல்லூரிக்குப் பின்வரும் துறைகளில் தற்காலிக இணைப்புப் பெறும் விரிவுரையாளர் (Lecturers on Secondment)பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

துறைகள்:

உடற்கல்வி
விஞ்ஞானம்
கணிதம்
ஆங்கிலம்
நடனம்
சங்கீதம்
சித்திரம்
தொழில் சார் கல்வி

தகைமைகள்:

1. விண்ணப்பதாரி இலங்கை ஆசிரியர் சேவையில் அல்லது அதிபர் சேவையில் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
2. அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் 1 ஆம், 2 ஆம் வகுப்புப் பட்டம்.
   அல்லது
   கல்வியில் பட்டப் பின் படிப்பில் திறமைச் (Merit) சித்தி.
   அல்லது
   கல்வியில் பட்டப்பின் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.
3. 24-04-2000 அன்று 40 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி தனது சுயவிபரத்தினை (Bio Data)

பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி,
கோப்பாய் ஆசிரியர் கலாசாலை,
கோப்பாய்.

என்ற முகவரிக்கு 28-03-2000 ஆம் திகதிக்கு முன்பாக கல்லூரி அதிபருடாக அனுப்பி வைக்கவும்.

★ சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய துறைகளுக்குக் குறிப்பிட்ட துறையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

20-03-2000

பீடாதிபதி
யா. தே. க. க.
(சி/11487)


# மந்திகையில் 'அல்ற்ரா சவுண்ட்' இயந்திரம்

மந்திகை மருத்துவ மனையின் எக்ஸ் கதிர் பிரிவில் 'அல்ற்ரா சவுண்ட்' இயந்திரம் இணைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கொழும்பில் இருந்து யாழ். பிராந்திய சுகாதாரப் பணிமனையினரால் எடுத்துவரப்பட்டிருந்த இந்த 'அல்ற்ராசவுண்ட்' இயந்திரத்தை இணைப்பதற்குக் கொழும்பில் இருந்து தொழில் நுட்பவியலாளர்கள் வராதமையினால் யாழ். போதனா மருத்துவ மனையின் தொழில் நுட்பவியலாளர்களின் உதவி பெறப்பட்டது.

நோயாளி ஒருவரின் வயிற்றிலுள்ள கல், சிறுநீரகக் கோளாறு, கர்ப்பிணித் தாய்மாரின் நிலைவரம் போன்ற பல விடயங்களை இந்த 'அல்ற்ராசவுண்ட்' இயந்திரம் மூலம் அறிந்து கொள்ள முடியும். (க-109)

# சனியன்று நடக்கும் பரீட்சைகளின் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். மத்திய கல்லூரியிலும், வேம்படி மகளிர் கல்லூரியிலும் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள பரீட்சைகள் தொடர்பான விவரங்களை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியில் மூன்று பரீட்சைகளும் வேம்படி மகளிர் கல்லூரியில் நான்கு பரீட்சைகளும் நடைபெறவுள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு;-

### யாழ். மத்திய கல்லூரி

★ பொது எழுதுநர் சேவை தரம் இரண்டு 'அ' பிரிவிலிருந்து தரம் ஒன்றுக்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சை.

★ பொது எழுதுநர் சேவையிலும் அதனோடு இணைந்த சேவைகளிலும் தரம் இரண்டு 'ஆ' பிரிவிலிருந்து தரம் இரண்டும் 'அ' பிரிவுக்கு தரம் உயர்த்துவதற்கான பரீட்சை.

★ தட்டெழுத்தாளர் சேவை தரம் இரண்டு 'ஆ' பிரிவில் உள்ளவர்களை 'அ' பிரிவுக்கு தரம் உயர்த்துவதற்கான பரீட்சை.

### வேம்படி மகளிர் கல்லூரி

★ தட்டெழுத்தாளர் சேவை தரம் இரண்டு 'அ' பிரிவில் உள்ளவர்களை தரம் ஒன்றுக்குப் பதவி உயர்த்துவதற்கான பரீட்சை.

★ கணக்குப் பதியுநர் சேவை தரம் இரண்டு 'அ' பிரிவில் உள்ளவர்களை தரம் ஒன்றுக்குப் பதவி உயர்த்துவதற்கான பரீட்சை.

★ தொலைக்கல்வி இறுதிப் பரீட்சை பகுதி II

★ மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நடத்தப்படும் நூலக பொறுப்பாளர் தரம் 3 பதவிக்கு ஆள்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை, செயற்றிட்ட உத்தியோகத்தர் பரீட்சை, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை.

(ஐ-10)


# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 12 — 06 — 1958

மறைவு 08 — 02 — 2000

## அமரர் ஆறுமுகம் ஜெயக்குமார்

மாதமொன்றரை சென்றாலும்
மறந்திடுமோ உன் திருமுகம்
உன் நினைவுகள் என்றென்றும்
மாறாது மறையாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி

பள்ளியவத்தை,
வல்வெட்டி.

(74687)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 30-04-1925

உதிர்வு: 06-04-1999



## அமரர் பொன்னம்பலம் நடராஜா

அன்பின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் அமைந்தவரே!
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறாது எம்துயரம்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

மனைவி,
மகன்: ருத்திரசிகாமணி,
(ஜேர்மனி)
மருமகள், பேரப்பிள்ளைகள்.

மாரியம்மன் வீதி,
அம்பத்தை.
திருநெல்வேலி.

(74679)

# புதிய தேர்தல் முறைக்கு
# சிறிய கட்சிகள் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 23

தேர்தல் முறையினில் மாற்றம் கொண்டு வரும் அரசாங்கத்தின் திட்டத்துக்கு சிறிய மற்றும் சிறுபான்மைக் கட்சிகள் மத்தியில் ஓரளவு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

தற்போதைய விகிதாசாரத் தேர்தல் முறையில் உள்ள குறைபாடுகளைக் களையப் போவதாகக்கூறி அதில் மாற்றங்களைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இன்னும் இரு மாத காலத்துக்குள் இந்த தேர்தல் முறையில் மாற்றம் செய்வதற்கான சட்டப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அரசமைப்பு விவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய முறைமையின் அடிப்படையில் நாடாளுமன்றத்தில் மொத்தம் 268 ஆசனங்கள் இடம்பெறும் என்றும் அவற்றில் 168 ஆசனங்களுக்கான தெரிவுகள் தொகுதி வாரியான தேர்தலின் மூலமும் 60 ஆசனங்களுக்கான உறுப்பினர்கள் மாவட்ட ரீதியில் விகிதாசார தேர்தல் முறையிலும் ஏனைய 40 ஆசனங்களுக்கானவர்கள் தேசியப் பட்டியல் ஒன்றின் அடிப்படையிலும் —

தெரிவு செய்யப்படுவார்கள் என்று கூறப்படுகின்றது.

இந்த முறையினால் நாடாளுமன்றத்தில் தமிழ் மற்றும் ஏனைய சிறுபான்மைக் கட்சிகளின்முக்கியத்துவம்குறைந்துவிடும்என்று இச்சிறுபான்மைக் கட்சிகள் கருதுகின்றன.

அதேபோல் சிறிய கட்சிகளும் இதனால் பிரதிநிதித்துவத்தை இழக்கும் நிலை உருவாகலாம் என்றும் நம்பப்படுகின்றது.

இதனால் இத்தகைய கட்சிகள் இந்த முறைமையை தாம் எதிர்ப்பதாகக் கூறுவதுடன் தொகுதிவாரியான தேர்தல் நடந்தாலும் இங்குஜேர்மனிய முறைப்படி தேர்தல் நடைபெறவேண்டும் என்று அவை வலியுறுத்தியுள்ளன.

இதே வேளை—

இரண்டு முன்னணிக் கட்சிகளும் இது விடயத்தில் உடன்பாடுகாணும் சாத்தியம்உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## சாவகச்சேரி நகரசபையில்

# சில வேலைத் திட்டங்களுக்கு ஆளுநர் அங்கீகாரம் கிடைத்தது

தென்மராட்சி மார்ச் 23

சாவகச்சேரி நகரசபையினால் வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பிவைக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை வேலைத் திட்டங்களில் ஒரு பகுதி வேலைத் திட்டங்களுக்கு வடக்கு— கிழக்கு மாகாண ஆளுநரால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதுபற்றி மாகாண ஆணையாளர் க. சபாபதிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் விவசாயத் திணைக்களத்தின் உதவியுடன் நீர்ப்பாய்ச்சலுடன் கூடிய நிலக்கடலை. கௌபி ஆகிய பயிர்செய்கைகளை ஊக்குவிக்க 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டிருக்கிறது.

முதலாம் வட்டாரத்தில் ஈச்சந்தாழ்வு ஒழுங்கைக்கு இரவலிடும் வேலைக்கு 80 ஆயிரம் ரூபாவும்—

மூன்றாம் வட்டாரத்தில் பிலான் ஒழுங்கையைத் திருத்தி மதகு அமைக்க ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபாவும்—

எட்டாம் வட்டாரத்தில் உள்ள மகிளங்கேணி குளத்தை மண் போட்டு மூடுவதற்கு ஒரு லட்சத்து 17 ஆயிரம் ரூபாவும்—

சபையின் பொது நூல் நிலையங்களுக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கு ஒரு லட்சம் ரூபாவும்—

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ தெரிவித்தார்.

சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிலக்கடலை கௌபி பயிர்ச் செய்கையை, ஊக்குவிக்க நாற்பது விவசாயிகளுக்கு விதைகள், பசளை, தொழில் நுட்ப உதவிகள் பயிற்சி வகுப்பு ஆகியவற்றை விவசாயத் திணைக்களத்தினர் வழங்குவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## ஆடை களைந்த சம்பவம்:

# ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு மகளிர் அமைப்பு முஸ்தீபு

கொழும்பு, மார்ச் 23

தற்கொலைப் போராளி என்ற சந்தேகத்தின் பேரில் கொழும்பு வீதி ஒன்றில், பெண் ஒருவர் விமானப் படையினரால் பகிரங்கமாக உடைகளைக் களைய நிர்ப்பந்திக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து சமாதானத்துக்கான பெண்கள் ஒன்றியம் என்னும் அமைப்பு நாளை வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாகத் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் கொழும்பு கொம்பனித் தெருவில் பெண் ஒருவரைச் சோதனையிட்ட படையினர் அவரிடம் அடையாள அட்டை இல்லை என்று தெரியவந்ததும் அவரது நடவடிக்கைகளில் சந்தேகம் கொண்டதாகக் கூறிப்பலர் முன்னிலையில் உடைகளைக் களையுமாறு அவரைப் பணித்தனர். உத்தரவுக்கிணங்க அந்தப் பெண் தெருவில் நின்ற நிலையிலேயே உடைகளைக் களைந்தார்.

இந்தச் சம்பவம் சகலபெண்களையும் இழிவுபடுத்துவதாக அமைந்து விட்டது எனத் தெரிவித்து மகளிர் அமைப்புக்கள் போர்க்கொடி உயர்த்தியுள்ளன.

பிரஸ்தாப பெண் நடத்தைகெட்டவர் என்று கூறப்படுகிறது. அவ்வாறு அவர் என்ன தொழில் செய்தாலும் நடுத்தெருவில் வைத்து ஒரு பெண்ணை நிர்வாணப்படுத்த எவருக்கும் அதிகாரம் கிடையாது எனவும் கண்டனம் வெளியிட்டுள்ள மகளிர் அமைப்புக்கள் இந்தச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதிக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளனர்.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இந்தப் பெண் தற்போது கொம்பனித் தெரு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

(ஐ - 8)

# சிறுதானிய செய்கை ஊக்குவிப்பு

வலி. தென்மேற்கு, மார்ச் 23

நவாலி விவசாயிகள் சம்மேளனத்திற்கு உட்பட்ட பகுதிகளில் விவசாயிகள் சிறுதானியச் செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் சம்மேளனம் ஊக்கமளித்து வருகின்றது.

எள், பயறு, சணல் போன்ற சிறுதானியங்களை நெல் அறுவடை செய்தநிலங்களில் பயிரிடுமாறு துண்டுப் பிரசுரங்கள் மூலம் பிரசாரம் செய்யப்பட்டுள்ளது.

சிறுதானியங்களுக்கான உகந்த நிலச்சூழல் மற்றும் காலநிலை தற்போது உள்ளதால் உடனடியாக அனைத்து விவசாயிகளும் அதில் ஈடுபடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஐ-185)

# விவசாயக் கிராமம் கையளிப்பு நிகழ்வு

வவுனியா, மார்ச் 23

வவுனியா எல்லத்தர் மருதங்குளத்தில் 3 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட விவசாயக் கிராமம் அந்தப் பிரதேச மக்களிடம் வெள்ளியன்று ஒப்படைக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களின் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இந்தக் கிராமத்தில் 223 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன.

இக்கிராமத்தை மக்களிடம் கையளிக்கும் நிகழ்ச்சிக்கு அரசாங்க அதிபர் கே. கணேஷ் தலைமை வகித்தார்.

(க-3)

# திருத்தாண்டகம் முற்றோதல்

கொழும்புத்துறை, மார்ச் 23

நல்லூர் தேரடியில் உள்ள அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் காலை 7.30 மணிக்கு அப்பர் திருமுறையான ''திருத்தாண்டகம்'' முற்றோதலும் விசேட பூசை, ஆராதனையும் நடைபெறும்.

யாழ். குடாநாட்டில் இத் திருத்தாண்டக முற்றோதல் முதல் தடவையாக இடம் பெறவுள்ளது.

நண்பகல் 12.30 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

(ஐ-30)

# பூங்காவை திருத்தக் கோரிக்கை

சண்டிலிப்பாய், மார்ச் 23

மானிப்பாய் — ஆனைக்கோட்டை பிரதான வீதியிலுள்ள சிறுவர் பூங்காவைப் பொறுப்பேற்றுப் பராமரிக்குமாறு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையிடம் உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிறுவர்களுக்கான விளையாட்டு வசதிகளுடன் முன்னர் நிறுவப்பட்ட இப்பூங்கா தற்போது தகுந்த முறையில் பராமரிக்கப்படாமையால் திருட்டுக்கள் இங்கு நடைபெற்று வருகின்றன. இங்கு நடப்பட்ட பூங்கன்றுகளும் தகுந்த முறையில் பராமரிக்கப்படாததனால் அழியும் நிலையில் உள்ளன. இப் பகுதியிலுள்ள சிறார்களின் பொழுதுபோக்கு இடமாகவும் விளையாட்டு இடமாகவும் இதனைப் பயன்படுத்துவதற்கு ஆவன செய்யப்பட வேண்டும் என்று இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது;

உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ந. சிவபாதம் (புத்தொளி) சங்கத்தின் சார்பில் இதனை அனுப்பி வைத்துள்ளார்.

(ஐ-135)

# செய்திக் கொத்து

## செயற்பாட்டறைத் திறப்புவிழா

நெடுந்தீவு, மார்ச் 23

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் பாலர் ஆரம்பக்கல்விக்கான செயற்பாட்டறை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மகாவித்தியாலய அதிபர் திருமதி சாரதா கிருஷ்ணதாஸ் தலைமையில் நடைபெற்ற இத்தத்திறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தீவுப் பகுதிக்கல்வி வலய ஆரம்ப உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. செல்வரத்தினம் செயற்பாட்டறையைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் கலந்துகொண்டார்.

[க—111]

## சனசமூக நிலையம் மீண்டும் இயங்குகிறது

நல்லூர், மார்ச் 23

நாயன்மார்கட்டு பாரதி மன்ற சனசமூக நிலையம் மீண்டும் இயங்கத்தொடங்கியுள்ளது.

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக இந்நிலையத்தில் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டிருந்ததால் மேற்படி சனசமூகநிலையம் மூடப்பட்டிருந்தது. தற்போது சோதனைச் சாவடி இவ்விடத்தில் இருந்து அகற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சனசமூக நிலையம் இயங்க ஆரம்பித்துள்ளது. [க—103]

## விஞ்ஞானகூடத் திறப்பு விழா

கொழும்புத்துறை, மார்ச் 23

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி விஞ்ஞான கூடத் திறப்புவிழா கடந்த 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை பாடசாலை அதிபர் ச. சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் வடக்கு — கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி பிரதமவிருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் வி. இராசையாவும் யாழ் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் பொ. சிவபாலனும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் ஆ. மகாலிங்கமும் கலந்து கொண்டனர். (ஐ-30)

## குடி தண்ணீர் வழங்க ஏற்பாடு

நெடுந்தீவு, மார்ச் 23

எழுவைதீவு மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய அங்குள்ள புனித தோமையார் ஆலயத்தில் குடிதண்ணீர்த் தொட்டி ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறையில் இருந்துபடகுமூலம் எடுத்து வரப்படும் குடிதண்ணீர் எழுவைதீவு துறைமுகத்தில் இருந்து குழாய்கள் மூலம் மேற்படி தொட்டிக்கு விடப்பட்டுப் பின்னர் பொது மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

(க-111)

## கந்தரநுபூதி தொகுப்பு நூல்

சுழிபுரம், மார்ச் 23

வழக்கம்பரை பஜனைச் சபையினர் திருமுருக கிருபானந்தவாரியாரின் கந்தரநுபூதி தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளனர்.

இந்த நூல் சென்ற வருடம் முதலாக ஐந்து பாடல்களாகப் பதினொரு தரம் வெளியிடப்பட்டு ஒன்று சேர்க்கப்பட்டு நூலாக்கப்பட்டுள்ளது.

(க-28)

## வீதி புனரமைப்பு

நெடுந்தீவு, மார்ச் 23

புங்குடுதீவு குறிகாட்டுவான் யாழ்ப்பாணம் வீதியில் குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரம்வரை திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

ஏனைய பகுதி திருத்தப்படுவதற்காக கற்கள் பறிக்கப்பட்டுள்ளன. இந்தப் புனரமைப்புப் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்படுகின்றன.

(க-111)

## முதியோர் இல்லத்திற்கு மதியபோசன நிதி

சங்கானை, மார்ச் 23

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற பண்ணாகம் விசுவத்தனை முருகன் கோயில் தேர்த் திருவிழாவையொட்டி பண்ணாகத்தைச் சேர்ந்த ம. துரைசிங்கம் என்பவர் கைதடி முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு மதியபோசனம் வழங்குவதற்காக நிதிஉதவி வழங்கியுள்ளார்.

(க-29)

## புத்தகக் கண்காட்சி

சண்டிலிப்பாய், மார்ச் 23

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினரால் அண்மையில் நடத்தப்பட்ட புத்தகக் கண்காட்சியை பெரும் எண்ணிக்கையிலான மாணவ மாணவிகள் பார்வையிட்டனர்.

கல்லூரி அதிபர் திருமதி விஜயராணி பசுபதிப்பிள்ளை இப் புத்தகக் கண்காட்சியை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். சேவாச்சிரம செயலர் சுவாமி சித்ருபானந்தா ஸ்ரீ இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாதேவி ஆகியோர் பற்றிய நூல்களை இக் கண்காட்சியின் போது மாணவர்களுக்கு அன்பளிப்புச் செய்தார்.

(க-135)

## திருச்சபைப் பிரதிநிதிகள் வருகை

நெடுந்தீவு, மார்ச் 23

கொழும்பில் தலைமையகத்தைக் கொண்ட இலங்கை தென்னிந்திய திருச்சபைகளின் சிறுவர் நலன் பிரிவுப் பொறுப்பாளர் வண. போதகர் பி. ஜே. ஆனந்தராசா, திருமதி ஏ. சுகுணா தென்னிந்திய திருச்சபை திட்டமிடல் பணிப்பாளர் வீ. மித்திரரஞ்சன் ஆகியோர் அண்மையில் நெடுந்தீவுக்கு வருகை தந்து நெடுந்தீவு மத்தி, மேற்குப் பகுதிகளில் உள்ள திருச்சபையின் சிறுவர் பராமரிப்பு நிலையங்களைப் பார்வையிட்டனர்.

(ஐ-111)

# குருநகர் வலைத்தொழிற்சாலைக்கு மூலப்பொருள் எடுத்து வருவதில் சிக்கல்

### அனுமதி கிடைக்கவில்லை என்கிறார் அதிகாரி

குருநகர் சீநோர் வலைத் தொழிற் சாலைக்கு கொழும்பிலிருந்து மூலப் பொருள்களை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அனுமதி வழங்கப்படாமையினால் தொழிற்சாலையை திட்டமிட்டபடி திறந்து வைக்க முடியாமலிருப்பதாக இத்தொழிற்சாலையின் பிரதிப் பொதுமுகாமையாளர் கி.கஜமுகலிங்கம் தெரிவித்தார்.

கடந்தகால வன்செயல்களினால் சேதமடைந்த இத்தொழிற்சாலை அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டது.

ஏப்ரல் முதல்வாரத்தில் இத்தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. இத்தொழிற்சாலைக்குத் தேவையான இரசாயனப் பொருள்கள் மற்றும் மூலப்பொருள்களைக் கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கு பாதுகாப்பு அனுமதிக்கு மூன்று வாரத்திற்கு முன் விண்ணப்பிக்கப்பட்டது.

இதுவரையும் இதற்கான பாதுகாப்பு அனுமதி வழங்கப்படாமையினால் அவற்றை குறிப்பிட்ட நாளுக்கு முன் யாழ்ப்பாணம் கொண்டுவர முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அதனால் தொழிற்சாலையை இயங்க வைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

# கைத்தொழில் கண்காட்சி ஏப்.9,10,11 ஆம் திகதிகளில்!

யாழ்ப்பாணம்,மார்ச்23

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அனுசரணையுடன் தொழிற்றுறை திணைக்களம், கிராம அபிவிருத்தித் திணைக்களம், கைத்தொழில் அபிவிருத்திச்சபை ஆகியன இணைந்து நடத்தும் கைத்தொழில், கைப்பணி கண்காட்சி எதிர்வரும் 9,10,11ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில்நடைபெறவுள்ளது.

யாழ். குடாவிலுள்ள கைத்தொழில், கைப்பணி நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களின் கைத்தொழில் பொருள்கள் கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன.

இக்கண்காட்சியில் வைக்கப்படும் பொருள்களில் சிறப்பான பொருள்கள் தெரிவுசெய்யப்பட்டு அவற்றை உற்பத்தி செய்தவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இக்கண்காட்சி சம்பந்தமான ஒழுங்குகள் பற்றிய கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(உ-3-5)

# டிறிபேக்கில் நிலை கொண்டுள்ள படையினரை விலக்கக் கோரிக்கை

### மாகாண ஆளுநருக்கு மகஜர்

தென்மராட்சி,மார்ச்23

கடந்த நான்கு வருடங்களாக படையினர் நிலைகொண்டுள்ள சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் கட்டடத் தொகுதிகளை மீட்டுத் தருமாறு கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

அண்மையில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுக்களின்போது பாடசாலைகளில் நிலைகொண்டுள்ள படையினரை அவ்விடத்திலிருந்து விலக்கிக்கொள்ள ஆளுநர் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

கல்லூரியின் ஆரம்பப்பிரிவு வகுப்பறைகள், உயர் வகுப்புகளுக்கான மாடிக்கட்டடம், கலையரங்கு, விளையாட்டுமைதானம், கிணற்றுடன் கூடிய நீர்த்தாங்கி ஆகிய பகுதிகளில் படையினர் நிலை கொண்டிருப்பதால் -

கல்லூரியில் வகுப்பறைகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி, தரம் ஒன்று மாணவர்களுக்கான ஒழுங்கமைக்கப்பட்ட வகுப்பறை இல்லாமை, உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகள் நடாத்த முடியாமை, மாணவர் தொகைக்கேற்ப குடிதண்ணீர் பற்றாக்குறை போன்றவை ஏற்பட்டுள்ளதாக மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-3-17)

# பெப்ரவரியில் கைதான இளைஞர் திங்களன்றே காங்கேசனுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்23

திருநெல்வேலிப் பகுதியில் பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி இராணுவத்தால் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் காங்கேசன்துறை கைதிகள் தடுப்புமுகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த பாலச்சந்திரலால்பிரதீபன்(வயது 21) என்ற இளைஞரே ஊரெழு இராணுவத்தால் கடந்த மாதம் கைது செய்யப்பட்டவராவார்.

திருநெல்வேலியிலுள்ள வீடியோ நிறுவனம் ஒன்றின் உரிமையாளரான இவரைக் கடையில் வைத்துக் கைது செய்த இராணுவத்தினர் கடந்த 3ஆம் திகதிவரை ஊரெழு முகாமில் தடுத்து வைத்திருந்து பின்னர் அன்றையதினம் பலாலி இராணுவப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பின்பு அங்கிருந்து நேற்று முன்தினம் இந்த இளைஞர் காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக நேற்று அங்கு சென்று கைதிகளைப்பார்வையிட்டுத் திரும்பிய மனிதஉரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரி என். ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

இதேவேளை காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமில் 3 பெண்கள் உட்பட 6 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (3-10)


## பொதுக்கூட்டம்

சுன்னாகம் வர்த்தக சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் 25.03.2000 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வர்த்தக சங்க மண்டபத்தில் நடைபெறும். வர்த்தக சங்க அங்கத்தவர்கள் அனைவரும் 12.30 மணியளவில் தங்கள் வியாபார ஸ்தாபனங்களைப் பூட்டி பிற்பகல் 2.30 மணிக்கு முன்னதாக உங்கள் வரவைப் பதிவு செய்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*ந. அரசரத்தினம்*
*தலைவர்*

*எஸ். கனகநாயகம்*
*செயலாளர்.*

(74738)



JAFFNA COLLEGE INSTITUTE OF AGRICULTURE

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

SHORT COURSE IN AGRICULTURE

4 மாத கால விவசாய பயிற்சி நெறி

பயிரியல், பூங்கனியியல், மிருக பரிபாலனம், விவசாய மூல தத்துவம் ஆகிய பாடங்களை உள்ளடக்கிய இலவச சாதனா போதனா பயிற்சி நெறிக்கு க.பொ.த (சாதாரணம்) கல்வி கற்ற 16-26 வயதுக்கிடைப்பட்ட இரு பாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் பயிற்சிநெறிக் காலத்தில் உதவு தொகை வழங்குவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் :-

29-03-2000 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித் தகைமைப் பத்திரங்கள், கிராம சேவையாளரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும்.

*மேலதிக விவரங்களுக்கு :-*

*அதிபர்,*
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம் - சுன்னாகம்.

(74739)


## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்23

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழக அணிகளுக்கு இடையில் இடம்பெறும் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் இன்று காலை 7.00 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் பத்தாயிரம் மீற்றர் ஓட்ட மரதன் போட்டியும் தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு ஏனைய மெய்வன்மை நிகழ்வுகளும் நடைபெறும். (3-8)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்23

கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வுகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலைக்கு அருகிலுள்ள மைதானத்தில் அதிபர் இ.அருணாசலம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுகளில் கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் இ.சிவபாதசேகரம் பிரதம விருந்தினராகவும், சமூர்த்தி முகாமையாளர் தி.சந்திரஹாசன கௌரவ விருந்தினராகவும், பாடசாலை நலன் விரும்பிகளான ந.சுப்பிரமணியம், க.சின்னையா, து.தவராசா, த.தங்கராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

(ஐ-8-15-178)

* * *

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையேயான இரண்டாயிரமாம் ஆண்டுக்கான மெய்வன்மைப்போட்டிகள் நாளை வெள்ளி பிற்பகல் 1.30 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொள்வார். நிகழ்வில் வெற்றி ஈட்டியோருக்கான பரிசில்களை திருமதி இ.பாலசுந்தரம்பிள்ளை வழங்குவார்.

(உ-31)

* * *

மட்டுவில் வடக்கு கமலாசனி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டிகள் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் செ.சுப்பிரமணியம் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக லயன் வைத்திய கலாநிதி - சு.கி.அருளானந்தமும் சிறப்பு விருந்தினராக நில அளவை அத்தியட்சகர் பொ.சிவதாஸும் கலந்துகொள்வர். (உ-30)


## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன சிரேஷ்ட கணிதத்துறை ஆசிரியர்
திரு. ப.ஜெயக்குமார் அவர்களின்
அன்புத் தாயார்
**திருமதி மகேஸ்வரி பரராஜசிங்கம்**
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைந்தோம். அன்னாரின் குடும்பத் துயரில் நாமும் பங்கேற்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

சயன்ஸ் அக்கடமி,
நல்லூர்.

(C/11508)



# மரண அறிவித்தல்கள்

## வீரசிங்கம் அருளம்பலம்

(வசாவிளான்)

வசாவிளானைச் சேர்ந்த வீரசிங்கம் அருளம்பலம் நேற்றுமுன்தினம் (21.03.2000) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.10 மணியளவில் நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் - லட்சுமிபிள்ளை தம்பதியினரின் இளைய புதல்வனும் சிவபாக்கியத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் கமலசேகரம் (நில அளவையாளர், உரும்பிராய்), சுதர்ஜெனா (நீர்கொழும்பு), கணேஸ்வரி (நீர்கொழும்பு), குணசேகரி (உரும்பிராய்), ஞானசேகரி (சுவிஸ்), பவான் (சுவிஸ்), தனேஸ்வரி (கனடா), தேவதயாநிதி (சுவிஸ்), தயாபரன் (நீர்கொழும்பு) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும் நாகப்பிரபா, நாகராசா (வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்), மகராசா, தியாகலிங்கம், புவிநாதன், ஜயந்தி, துரைசிங்கம், பாலகுமார், சந்திரகுமாரி ஆகியோரின் அன்பு மாமனாரும் சோபனா, மோகனா, சுபானு, சிவாஜினி, கஜந்தினி, முகுந்தன், தர்சினி, தட்சாயினி, பிரதீபன், பிரதாபன், லவலயன், லயலவன், லாறா, ஜதுஷன், கார்த்திகா, கௌசிகா, அஜந்தன், சுஜீவன், நிஜதா, நிஜிவன், தர்சிலி, ஸ்ரெவ்னி ஆகியோரின் அன்புப் பேரனும் பாணுஜன், ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2000) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது நீர்கொழும்பு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செமற்றிறோட் பொதுமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றோம்.

தகவல்:
கமலசேகரம்
(மகன் - நிலஅளவையாளர்)
உரும்பிராய்.

*பிரபமஹால்,*
*உரும்பிராய்ச் சந்தி.*

(74723)

## திருமதி மாகிறட் (அம்மா) மரியான்

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாகிறட் மரியான் நேற்றுமுன்தினம் (21.03.2000) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நீக்கிலான் மரியானின் அன்பு மனைவியும் திருமதி ஞா.சொர்ணம் (மன்னார்), திருமதி சி.ஞானம், ம.கிறிஸ்தோபர் (மன்னார்), ம.அமிர்தநாயகம், ம.பெனடிக்ற் (கொழும்பு), ம.அருள்நேசன், திருமதி த.பற்றிமா சுகிர்தம், செல்வி ம.சறோஜா மெற்றில்டா ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஞானபதி மற்றும் சிங்கராயர், ஜெய்சி எமில்டா, மேரி திரேசா, ரேரிஷி எமில்டா, டெனிசியா சறோஜினி, தர்மராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.03.2000) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் சில்லாலை கதிரைமாதா திருப்பதியில் இரங்கல் திருப்பலியுடன் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம.அமிர்தநாயகம்
ம.அருள்நேசன்
(மகன்மார்)

*வங்கி வீதி,*
*மானிப்பாய்.*

(74735)

## திருமதி சச்சியானந்தம் சிவலோகநாயகி

சரசாலை தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சச்சியானந்தம் சிவலோகநாயகி நேற்று (22.03.2000) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சச்சியானந்தம் (பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) அவர்களின் அன்பு மனைவியும் சயந்தன் (சுவிஸ்), சயதீபன், சசீபன் (ஜனா- லண்டன்), சஞ்ஜீபன் (ஜின்னா - யா/இந்துக்கல்லூரி), சாரூபன் (தம்பி), கோபிகா (யா/பரஞ்சோதி வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் குணபாலசிங்கம் (கஸ்தூரி புடைவை மாளிகை, சாவகச்சேரி), ராசா (சுவிஸ்), கிளி (சுவிஸ்), காந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் துஜி, குமுதா, திருமதி கிளி, ராகினி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.03.2000) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கோண்டாவில் வடக்கு கொட்டைக்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.சச்சியானந்தம்
(கணவர்)

*கோகுல வீதி,*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*

(74745)

# சுரேஷ் அணியினர் யாழ்ப்பாணம் வருகை

வடமராட்சி,மார்ச்23

ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ்) அணியின் இரு பிரதிநிதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை யாழப்பாணம் வந்து சேர்ந்தனர்.

இவ்விருவரும் யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற பிரிட்டிஷ் தூதுவர் - தமிழ்க் கட்சிகள் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் யாழ்ப்பாணத்திலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை. அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை எனக் கூறப்பட்டது.

சுரேஷ் அணிப் பிரதிநிதிகளான ஏ.ஜி.லிங்கேஸ்வரன், ஏ.உதயகுமார்ஆகிய இருவருமே நேற்றுமுன்தினம் யாழ். வந்துசேர்ந்தனர். அவர்களே ஈ.பி.ஆர்.எல்..எவ். சார்பில் பிரிட்டிஷ் தூதர் சந்திப்பில் பங்குபற்றினர்.

சுரேஷ் அணியின் பிராந்திய அலுவலகம் ஒன்றை இவர்கள் இருவரும் விரைவில் யாழ்ப்பாணத்தில் திறப்பர் என்று கூறப்பட்டது.

(உ-3-5-173)

# கூட்டணிக்குழு நேற்று ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, மார்ச்23

வலி.வடக்குப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்தல் மற்றும் பாடசாலைகள், ஆலயங்கள் ஆகியவற்றில் இருந்து படையினரை விலக்குதல் ஆகியன தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று மாலை தன்னைச் சந்தித்த கூட்டணிக்குழுவிடம் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் நேற்றிரவு 8.45 மணிமுதல் 11.00 மணி வரை இந்தச் சந்திப்பு இடம் பெற்றதாகவும் இந்தச் சந்திப்பில் கூட்டணியின் சார்பில் எம்.பிக்களான இரா.சம்பந்தன், வீ.ஆனந்தசங்கரி, ஜோசப் பரராஜசிங்கம், துரைராஜசிங்கம், செல்வராசா, மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்புக்குறித்து இன்று கூட்டணி அறிக்கை ஒன்றை வெளியிடு மெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியை சந்தித்துப் பேச்சு நடத்தச் சென்றிருந்த கூட்டணிக் குழு சுமார் ஐந்து மணிநேரம் அலரி மாளிகையில் ஜனாதிபதியின் வருகைக்காக தவங்கிடக்க வேண்டி இருந்ததாக தெரியவந்துள்ளது.

ஒதுக்கப்பட்ட நேரத்துக்கு கூட்டணிப் பிரமுகர்கள் அங்கு சமுகமளித்திருந்த போதிலும் ஜனாதிபதி ஐந்து மணி நேரம் காலம் தாழ்த்தியே அங்கு வந்தார் எனவும் தெரியவந்தது. (உ-7)

## பிரி.தூதுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமக்குத் தெரிவிக்கப்பட்டது.

"அழைப்புக் கிடைத்தவுடன் இச்சந்திப்பில் கலந்துகொள்ள நாம் விளைந்தபோது பிரிட்டிஷ் தூதுவர் தமிழ் கட்சிகளுடன் கலந்துரையாடலை நடத்திவிட்டு புறப்படத்தயாரானார்.

அதனால் அவருடன் உரையாட முடியவில்லை" - இப்படி அவர் தெரிவித்தார். (உ-5)

## கட்டைபறிச்சான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை புலிகளின் ஷெல் தாக்குதலை அடுத்து படையினர் பதில் ஷெல் தாக்குதல் நடத்தியதில் மாணிக்கம் துரைராஜா (வயது 28-மூதூர்) என்ற இளைஞர் உயிரிழந்தார். முருகேசு குணநாயகம் (வயது50-மூதூர்)என்பவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என திருகோணமலைச் செய்திகள் தெரிவித்தன.

மேற்படி சம்பவங்களையடுத்து மூதூருக்கும் -திருகோணமலைக்கும் இடையிலான போக்குவரத்து நேற்று பிற்பகல் வரை தடைப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-7-9-150-145)

## 2 தபால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையாளரான குமாரசிங்கம் விஷ்ணுகுமார் (வயது25 - யாழ்ப்பாணம்) ஆகியோரே இவ்வாறுகைது செய்யப்பட்டவர்களாவர்.

தபால் அதிபர் மற்றும் தபால் நிலைய சிற்றூழியர்களின் கைதுகளுக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

கொழும்பு - செட்டியார் தெருப் பகுதியில் உள்ள நகைக் கடை ஒன்றின் உரிமையாளர் ஒருவர் கடந்த திங்கள் அன்று புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் எனவும் -

அவர் கொடுத்த தகவலின் பேரிலேயே வவுனியா நகைக்கடை உரிமையாளர் கைது செய்யப்பட்டார் எனவும்-வவுனியாச் செய்திகள் தெரிவித்தன. (உ-7-164)

## அரசாங்கமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக யாழ். குடாநாட்டு மக்களின் கருத்தினை அறியும் பொருட்டே நாம் யாழ்ப்பாணம் வந்துள்ளோம்.

"இவ்விடயம் தொடர்பாக யாழ். மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படும் கருத்துக்களை சேகரித்து நேர்வே அரசுக்கு தெரிவிப்போம்.

இலங்கை அரசும் புலிகளும் கோரிக்கை விடுத்தால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராகச் செயற்பட பிரிட்டன் கூடத் தயாராக இருக்கின்றது".

- என்றார் லிண்டா ஜோய் டபீல்ட் அம்மையார்.

யுத்தம் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக குடாநாட்டு மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் டபீல்ட் அம்மையாருக்கு விளக்கிக் கூறினர். (உ-5-173-15-3-6)

## அக்கினிப பெருமூச்சு ஞாயிறு மேடையேறும்

யாழ். பல்கலைக்கழக வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியத்தின் அனுசரணையுடன் 'அக்கினிப் பெருமூச்சு' என்னும் நாடகம் எதிர்வரும் ஞாயிற்றுக்,கிழமை முற்பகல் 10.30 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் மேடையேறவுள்ளது. (3-10)

## மணிக்கூண்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோபுர கட்டடப் பணியைப் பூர்த்தி செய்யுமாறும் அவர் மாநகர சபையைக் கேட்டுக்கொண்டார்.

அதே நேரம் -

"இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு பிரிட்டன் தனது பங்களிப்பை உரிய முறையில் அளித்து வருகின்றது. தொடர்ந்து அதற்கான முயற்சியில் பிரிட்டன் ஈடுபடும்" என்றும் அவர் சொன்னார்.

இந்த நிகழ்வில் மாநகர சபையின் தேவைகள் தொடர்பாகப் பல கோரிக்கைகள் பிரிட்டிஷ் தூதரிடம் முன்வைக்கப்பட்டன. (உ-6-3)

## ஆலயம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளுக்கும் - விமானப் படையினருக்கும் இடையில் சுமார் அரை மணி நேரம் நடை பெற்ற கடுமையான துப்பாக்கிச் சமரை அடுத்தே இந்தத் தடை அமுலுக்கு வந்துள்ளதாக விமானப்படை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. நேற்றுக் காலை மேற்படி ஆலய பரிபாலன சபையினர் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரை விமான நிலையத்துக்கு அழைத்த கட்டளைத் தளபதி இந்தத் தடை உத்தரவு பற்றி அறிவித்தார்.

நண்பகல் 12 மணிக்கு முன்னர் ஆலயக் குருக்கள் மற்றும் அவரது குடும்பத்தினர் ஆலயச் சூழலில் இருந்து வெளியேறி விட வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் 11 மணியளவில் அங்கிருந்து வெளியேறி விட்டனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை புதுநகர்,வீச்சுக் கல்முனை, சேத்துக்குடா, திமிலை தீவு, வவுணதீவு ஆகிய கிராமங்களுக்கென இருக்கும் ஒரேயொரு உயர்தரப் பாடசாலையான ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் படையினரால் மூடப்படுவது தமிழ் மாணவர்களின் கல்வியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துமென மட்டக்களப்புச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

## தென்னாபிரிக்கா வெற்றி

சார்ஜா, மார்ச்23

சார்ஜாவில் மூன்று நாடுகளுக்கிடையில் நடைபெறும் சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி இந்திய அணியை 10 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியஅணி 45.2 ஓவர்களில் 164 ஓட்டங்களுக்குள் சுருண்டது. ஜடேஜா ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்கள் அடித்தார். பதிலுக்கு ஆடிய தென்னாபிரிக்க அணி 29.2 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 168 ஓட்டங்களைப் பெற்றது. (உ-8-6)

## மீண்டும் வெள்ளைப்பூரான் தொல்லை

யாழ்ப்பாணம்,மார்ச்23

கோடைகாலம், வெப்பம் அதிகரித்திருப்பதை அடுத்து விஷ ஜந்துகளின் தொல்லையும் அதிகரித்துள்ளது.

பருத்தித்துறை வியாபாரி மூலைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவும் ஒருவர் வெள்ளைப் பூரான் கடிக்கு இலக்கானார்.

இரவு 7 மணிக்கு வீட்டுக்குள் படித்துக்கொண்டிருந்தவேளை சிவராசா சிவசேந்தன (வயது 7) என்ற சிறுவனே பூரானால் கடியுண்டான்.

இச்சிறுவன் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளான்.

இச்சிறுவனுடன் சேர்த்து கடந்த ஒரு வாரகாலத்துக்குள் வடமராட்சிப் பகுதியில் மூவர் வெள்ளைப் பூரான் கடிக்கிலக்காகியுள்ளனர். (உ-15)

## சுமுகத் தீர்வு கிட்டியது

யாழ்ப்பாணம்,மார்ச்23

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட முதுநிலைப் பேராசிரியர் எம்.சிவசூரியாவின் ராஜினாமா தொடர்பான பிரச்சினைக்கு நேற்று சுமுகத்தீர்வு காணப்பட்டது.

வேதனக் கொடுப்பனவு தொடர்பான கோரிக்கையை பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்பதாக அவருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, அவர் இராஜினாமாவை வாபஸ் பெற்று தமது வழமையான பணிகளை தொடர்ந்தார். இப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காணப்பட்டதற்காக மருத்துவ மாணவர்களும் துணைவேந்தரும் திருப்தி தெரிவித்தனர்.

(உ-139-173)

## சனியன்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவைத் தலைவர் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள், அமரபுர மஹா சங்கத் தலைவர் தர்மவாச தேரோ மற்றும் எம்.எச்.எம்.நஸீம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பேரணிக்கு மேலும் பல உள்ளூர் அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், அரசாங்க லிகிதர் சேவைச் சங்க யாழ்.கிளை, யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை, பாரஊர்தி சமாசம், ஓட்டோ சமாசம், பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், யாழ்.மாவட்ட வணிகர் கழகம், எழுது விளைஞர் சங்கம், சைவக்குருமார் சங்கம் என்பனவும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளன.

வடபகுதியில் கைதாகிக் காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம், அன்னையர் முன்னணி ஆகியனவும் பேரணிக்கு ஆதரவு வழங்கவிருப்பதாக அறிவித்துள்ளன.

இதேவேளை -

சகல இந்து இளைஞர் மன்றங்களையும் இந்துசமய நிறுவனங்களையும் இந்தப் பேர ணியில் பங்குபற்றுமாறு இந்து இளைஞர் பேரவை கேட்டுள்ளது.

சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை சகல இந்து ஆலயங்களிலும் விஷேட பிரார்த்தனை மேற்கொள்ள வேண்டும் என்றும் பேரவை கோரியுள்ளது.

அன்றைய தினம் அனைத்து வர்த்தகர்களும் தங்களது வர்த்தக நிறுவனங்களை நண்பகல் வரைமூடி ஒத்துழைப்பு வழங்குமாறும் -

தனியார் கல்வி நிலையங்களும் தமது கல்வீ நிலையங்களை மூடி மாணவர்களை பேரணியில் கலந்து கொள்ளச் செய்யும்படியும்-

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு அறிக்கை ஒன்றில் கோரியுள்ளது.

### சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட

# சிறைக் கைதி தப்பினார் யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து

யாழ்ப்பாணம், மார்ச்23

சுகயீனம் காரணமாக யாழ். சிறைச்சாலையிலிருந்து கூட்டிச் செல்லப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கச் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் காலை 10மணியளவில் வைத்தியசாலையில் இருந்து தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாதச் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த டிசெம்பர் 8ஆம் திகதி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன் துறையில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த - அச்செழு வடக்கு, நீர் வேலியைச் சேர்ந்த தங்கராஜா சதீஸ் என்பவரே இவ்வாறு தப்பி ஓடியதாக கூறப்படுகிறது.

யாழ்.சிறைச்சாலையில் சுகயீனமடைந்த இவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த சில தினங்களுக்கு முன் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

விலங்கிடப்பட்ட நிலையில் பொலீஸ் மற்றும் சிறைக்காவலர்களின் பாதுகாப்புடன் வார்ட்டில் இருந்து சிகிச்சை பெற்று வந்த இவர் தப்பி ஓடியது குறித்து பொலீஸார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ-5-9-15-139)

# தொண்டர் ஆசிரியர் இன்று திருமலையில் மறியல் போர்

திருகோணமலை,மார்ச்23

திருகோணமலை மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் இன்று மாகாண கல்வி அமைச்சின் அலுவலகத்துக்கு முன் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

நீண்ட காலமாக நிரந்தர நியமனம் இன்றிக் கடமையாற்றும் தமது நிலையை அரசினதும் மாகாண ஆளுநரினதும் கவனத்துக்குச் கொண்டு வரவே இந்த மறியல் போராட்டம் என அவர்கள் தெரிவித்தனர்.

நிரந்தர நியமனம் பெற்றுத் தருவதாக ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஏற்கனவே உறுதியளித்திருந்த போதிலும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்து நேற்றுக் காலை 9 மணியளவில் சுமார் 135 தொண்டர் ஆசிரியர்கள் திருமலையில் உள்ள அக்கட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட டக்ளஸ் தேவானந்தா, உயர் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு 24 மணி நேரத்துக்குள் உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்ததாக அவர்கள் கூறினர்.

(உ-9-145-150)


## ரெலிபோன் வகைகள் விற்பனைக்கு

பலவிதமான வகைகளில் 'டயல்' செய்யக்கூடியதும் 'டயல்' செய்ய முடியாததுமான பனசோனிக் பனபோன், அலுவலக உபயோகத்துக்கு ஏற்ற இன்ரகொம்கள் (25 இணைப்புக்கள் உள்ளவை), டபிள் சொக்கற், ஜங்சன் பொக்ஸ் மற்றும் கனொன், சாப், கொனிக்கா ரக போட்டோஸ்ரற் இயந்திரங்களுக்குரிய உதிரிப் பாகங்கள், ரோனர்கள், வேண்டிய அளவுகளில் லமினேற்றிங் பிலிம், கே.வி. 2192 M3 ரீ.வி (ஜப்பான்) ஆகியவை விற்பனைக்குண்டு. ரெலிபோனுக்குரிய வயர் வகைகளும் பின் அடித்துக் கொடுக்கப்படும்.

**செல்வம் ஸ்ரோர்ஸ்**

330, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(74743)


## ஆறாவது ஆண்டு நினைவலைகள்

மலர்வு 31 - 09 - 1947



மறைவு 31 - 03 - 1994

**திருமதி துரைராஜா இராசமணி**

திதி: 23-03-2000

ஆறென்ன ஆண்டுகள் அறுபது சென்றாலும்
மாறாது உன்வுரு மனம் தனில் நிற்கிறதே!
ஆறாவது ஒருநாள் அசையாமல் நிற்குமே - உன்
ஆறான உள்ளங்கள் அலையுதே - எந்நாளும்
மாறாத வார்த்தைகளை இறுதிவரை சொல்லி
நீறான உன் உருவை நினைக்க விட்டாய் எம் மனதில்
வேறாக அல்ல விளைகின்றாய் எம்முடனே - நீ
மாறாத அமைதிபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவர், பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(74652)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.